[illegible] பத்து

Registered as a News Paper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆவணி 28 செவ்வாய்க்கிழமை (14-09-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 250

## பாலம்பிட்டியில் இருந்து வடக்கே

# மும்முனை நகர்வு முயற்சியில் படைத்தரப்புக்குப் பேரிழப்பு!

## 48 பேர் பலி; 650 க்கு மேல் காயம்

கொழும்பு, செப்ரெம்பர் 14

மன்னார் மாவட்டம் பாலம்பிட்டி பகுதியில் இருந்து வடக்கே பள்ளமடு, சீராட்டிக்குளம், பெரியமடு ஆகிய மும்முனைகள் ஊடாக நேற்றுமுன்தினம் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட நகர்வுமுயற்சியின் போது படைத் தரப்புக்குப் பலத்த சேதங்கள் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரை — 10 மணி நேரம் — நடைபெற்ற உக்கிரச் சண்டையில் இராணுவத் தரப்பில் ஓர் அதிகாரி உட்பட 48 படையினர் பலியானதாகவும்—

38 அதிகாரிகள் உட்பட 650 பேர் வரை காயமடைந்ததாகவும்—

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்திருக்கிறது

படைத்தரப்பில் ஏற்பட்ட சேதங்கள் இதைவிட மிக அதிகம் என்று சுயாதீன செய்தி வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த நகர்வு முயற்சியின் போது இராணுவத்தினருக்கு பலத்த இழப்பு ஏற்பட்டிருப்பதை படை வட்டாரங்கள் ஒப்புக்கொண்டன.

காயமடைந்த பல நூற்றுக் கணக்கான படையினர் அனுராதபுரம் பொது மருத்துவமனையிலும் 'விக்டரி' இராணுவ ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டு பின்னர் விமான

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பலியானோரில் 4 புலிகளின் விவரம்

வவுனியா, செப். 14

பாலம்பிட்டியில் இருந்து மும்முனைகளில் முன்னேறப் படையினர் மேற்கொண்ட நகர்வு முயற்சியை எதிர்த்து புலிகள் நடத்திய எதிர்ச் சமரில் பலியான 19 போராளிகளில் நால்வரின் பெயர் விவரங்களை புலிகள் அறிவித்துள்ளனர்.

அவை வருமாறு:-

★ லெப்டினன் சாந்தி அல்லது சாந்தினி (சின்னராசா சுகந்தி—யாழ்ப்பாணம்)

★ லெப்டினன் நந்தா (சின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் பொலீஸ் நிலையம் மீது புலிகள் திடீர்த் தாக்குதல்!

### 2 பொலீஸார் பலி! 14 பேர் காயம்!!

திருகோணமலை, செப். 14

திருகோணமலை மாவட்டம்—மூதூர் ஹாபி நகரில் உள்ள பொலீஸ்நிலையம் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப்புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் 2 பொலீஸார் உயிரிழந்தனர். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட 14 பொலீஸார் காயமடைந்தனர்

ஆர்.பி.ஜி. மோட்டார் மற்றும் சிறு ஆயுதங்கள் மூலம் விடுதலைப்புலிகள் திடீர் தாக்குதலை மேற்கொண்டதாகவும்—

பொலீஸாரும் இராணுவத்தினரும் இணைந்து புலிகளின் தாக்குதலை முறியடித்ததாகவும்—

பொலீஸ்நிலையப் பொறுப்பதிகாரியின் வதிவிடம் விடுதலைப்புலிகளால் தீக்கிரையாக்கப்பட்டதாகவும்—

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை — மேற்படி பொலீஸ் நிலையம் மீது தாம் மேற்கொண்ட 15 நிமிட நேர திடீர் தாக்குதலின் பின்னர் பொலீஸ் நிலையப் பகுதி தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டதாகவும்—

அங்கிருந்து பெறுமதியான ஆயுத தளபாடங்களைக் கைப்பற்றியபின்னர் பொலீஸ் நிலையத்தை முற்றாகத் தீக்கிரையாக்கியதாகவும்—

விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் தமது தரப்பில் கப்டன் இளங்கதிர் (முத்துலிங்கம் முகுந்தன்—திருகோணமலை) என்பவர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உப்பளப் புதைகுழியில் நேற்று சடலங்கள் எதுவும் கிடைக்கவில்லை

### ராஜபக்ஷவை மீண்டும் கூட்டிவர முடிவு

யாழ்ப்பாணம், செப். 14

செம்மணி உப்பளம் பகுதியில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட பெரும் மனிதப்புதைகுழியை நேற்று தோண்டிய போது அங்கிருந்து சடலங்களோ அன்றி எச்சங்கள் எதுவுமோ மீட்கப்படவில்லை.

சுமார் 20 பேரின் உடல்கள் ஒன்றாகப்போட்டு மூடப்பட்டதாக சோமரத்ன ராஜபக்ஷ தெரிவித்த இடத்திலேயே இந்த அகழ்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது.

ராஜபக்ஷ அடையாளம் காட்டிய அந்த இடத்தில் குறுக்கும் நெடுக்குமாக சுமார் நூறு மீற்றர் நீளப் பிரதேசம் ஆறு அடி முதல் எட்டு அடி வரை நேற்று அகழ்ந்து பார்க்கப்பட்டது. ஆனால் அங்கு எலும்புகளோ சடலங்களோ தென்படவில்லை.

அங்கு எலும்புகள் காணப்படாதது குறித்துகாலிறுகுணு பல்கலைக்கழக சட்டமருத்துவத் துறைப் பேராசிரியர் சந்திரசிறி நெரியல்ல யாழ். மேலதிக நீதிவான் எம். இளஞ்செழியன் முன்னிலையில் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## செம்மணிச் சந்தி அருகே

## கால்கள் கட்டிய நிலையில் ஓர் எலும்புக் கூடு மீட்பு

யாழ்ப்பாணம், செப். 14

செம்மணிச் சந்தியில் — கண்டி வீதியும் நல்லூர் — நாயன்மார்கட்டு வீதியும் சந்திக்கும் இடத்தில் உள்ள சோதனைச் சாவடிக்குப் பின்புறமாக நேற்று தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட தோண்டுதல் பணியின்போது மேலும் ஓர் எலும்புக்கூடு மீட்கப்பட்டது.

கால்கள் கட்டப்பட்ட நிலையில் நீட்டி நிமிர்த்தி படுக்க வைக்கப்பட்டுப் புதைக்கப்பட்ட ஓர் ஆணின் சடலமே நேற்று மீட்கப்பட்டது. சடலத்துடன் கரும் சிவப்பு நிற தொப்பி ஒன்றும் அப் புதைகுழியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த இடத்தில் கடந்த சில தினங்களாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளில் இரு பெண்களின் எலும்புக் கூடுகள் உட்பட ஆறு எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அந்த இடத்தில் அகழ்வுப் பணி இன்றும் தொடர்ந்து நடைபெறும். (ஐ-3-6)

## கிணறு ஒன்றினுள் பல சடலங்கள்?

### தோண்டுமாறு கோரி மனு

யாழ்ப்பாணம். செப். 14

செம்மணிச் சந்தியில் சோதனைச்சாவடிக்கு அருகே தற்போது புதைகுழிகள் தோண்டப்படும் பகுதியில் கிணறு ஒன்றினுள் பல சடலங்கள் ஒன்றாகப் போட்டு மூடப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருப்பதாகவும்

எனவே அதனைத்தோண்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் —

கைதானோர், காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தின்சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கோரியுள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில்

## 24 மணி நேரத்தினுள் இருமின்மாற்றிகள் தகர்ப்பு

வவுனியா, செப். 14

வவுனியாவில் 24 மணி நேரத்தில் இரண்டு மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டுள்ளன.

பண்டாரிக்குளம் பகுதியில் அமைந்திருந்த மின்மாற்றி நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் தகர்க்கப்பட்டது.

மின்சாரவேலி இடப்பட்டு பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்த அந்த மின்மாற்றியை நோக்கி தொலைவில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா பஸ் டிப்போவினுள் ஆயுதபாணிகள் அட்டகாசம்

### 3 பஸ்கள் தீக்கிரை! பல பஸ்கள் சேதம்! பணம் சூறை!!

வவுனியா, செப். 14

வவுனியா ஈரப்பெரியகுளத்தில் உள்ள பஸ் டிப்போவினுள் நேற்று முன்தினம் ஞாயிறு இரவு 11.45 மணியளவில் புகுந்த இனந்தெரியாத ஆயுதபாணிகள் நடத்திய தாக்குதலில் பல பஸ்கள் சேதமடைந்தன. மூன்று பஸ்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

டிப்போவில் இருந்த ஒரு [illegible] யிடப்பட்டது

டிப்போவில் இரவுக் கடமையில் ஈடுபட்டிருந்த ஊழியர்களை மிரட்டி ஓரிடத்தில் அடைத்து வைத்துவிட்டு அந்த ஆயுதக் குழுவினர் அங்கு அட்டகாசம் புரிந்துள்ளனர்.

எட்டு பஸ்களில் தொடராகக் குண்டுகளைப் பொருத்திவிட்டு மூன்று பஸ்களை தீக்கிரையாக்கியுள்ளனர். கிரனேட் மூலம் நடத்தப்பட்ட தாக்குதலில் பஸ்கள் பல பலத்த சேதமடைந்தன. டிப்போவில் இருந்த

(1) ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், செப். 14

நல்லூர் பகுதியில் கடந்த 11 ஆம் திகதி இரு இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## மணவாளக்கோல உற்சவம்

யாழ்ப்பாணம், செப். 14

கொக்குவில் — குளப்பிட்டி அருள்மிகு மங்கள மகாகாளி அம்பாள் ஆலய மணவாளக் கோல உற்சவம் இன்று காலை 9 மணி முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து இடம் பெறும். (ஐ-7)

### கிணறு...

(முதலாம் பக்கத் தொடர்)

இது தொடர்பாக அவர்கள் நேற்று செம்மணியில் வைத்து மனு ஒன்றை நீதிவான் எம். இளஞ்செழியன் முன் சமர்ப்பித்தனர்.

கிருஷாந்தி கொலை வழக்குக் குற்றவாளிகள் அடையாளம் காட்டிய இடங்களிலேயே தற்போது தோண்டும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் —

தற்சமயம் குறிப்பிடப்படும் மற்றொரு புதைகுழி தொடர்பான புதிய சாட்சியங்களைக் குற்றப் புலனாய்வுத் துறையினருக்குத் தெரிவித்தால் அது விடயமாக நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் —

நீதிவான் அப்போது தெரிவித்தார். (ஐ-3-6)

### உப்பளப்...

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்றைய தோண்டும்பணி முடிவடைந்ததும் செம்மணியில் கூடிய நீதிமன்ற அமர்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது;-

உப்பளப் பகுதியில் சோமரத்ன ராஜபக்ஷ அடையாளம் காட்டிய இருவேறு இடங்களிலும் காலை முதல் புல்டோஸரின் உதவியுடன் தோண்டும் பணி இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளால் பாவிக்கப்பட்டு கைவிடப்பட்ட எல் (L) வடிவிலான பதுங்குகுழியும் அங்கு கண்டுபிடிக்கப்பட்டு அங்கும் தோண்டும் பணி மேற்கொள்ளப்பட்டது.

எந்தச் சடலமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

நாளை (செவ்வாய்)யும் அந்தப் பிரதேசத்தில் மேலும் அகழ்வுப் பணியை மேற்கொள்ள ஏற்பாடு செய்துள்ளோம்.

அதன் பின்னர் இதுகுறித்து இறுதி முடிவு செய்யலாம்— என்றார்.

இதனை ஏற்றுக் கொண்ட நீதிவான் இன்று அந்தப் பகுதியில்தோண்டும் பணியை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

செம்மணியில் இதுவரை தோண்டப்பட்ட புதைகுழிகளில் முன்னர் கூறப்பட்ட எண்ணிக்கையிலான மனித சடலங்களோ எச்சங்களோ காணப்படாததை அடுத்து கிருஷாந்தி குமாரசாமி பாலியல் வல்லுறவு படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் இராணுவக் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவை மீண்டும் செம்மணிக்கு அழைத்து வந்து புதைகுழிகள் தொடர்பாக மேலும் விவரங்களைப்பெற முடிவு செய்யப்பட்டுள்ளது.

செம்மணி உப்பளப் பகுதியில் இருபதுக்கும் அதிகமான சடலங்கள், புலிகள் முன்னர் பயன்படுத்திய பதுங்கு குழிக்குள் போடப்பட்டு மண்ணால் மூடப்பட்டதாகவும்—

செம்மணிச் சந்தியில் நுழைவாயில் பிள்ளையார் கோயிலுக்குப் பக்கத்தில் ஆகக் குறைந்தது நான்கு சடலங்கள் புதைக்கப்பட்டதாகவும்—

அதற்குப் பக்கத்தில் சில இடங்களில் ஒன்றிரண்டாக பல சடலங்கள் ஆங்காங்கே கிடங்கு வெட்டிப் புதைக்கப்பட்டதாகவும்—

சோமரத்ன ராஜபக்ஷகூறியிருந்தார்.

ஆனால் அவர் காட்டிய பல இடங்கள் தோண்டப்பட்ட போது அங்கு சடலங்களோ, எலும்புக்கூடுகளோ, எச்சங்களோ காணப்படாதது அவதானிக்கப்பட்டு வருகின்றது.

அதையடுத்து ராஜபக்ஷவை மீண்டும் செம்மணிக்குக் கூட்டி வந்து மேல் விவரங்களை அவரிடம் பெறயாழ். நீதிமன்றம் முடிவு செய்தது.

இதுவரை செம்மணிப் பிரதேசத்திலிருந்து 11 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்)

65 ஆயிரத்து 880 ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

டிப்போவில் தாக்குதல் நடத்திய ஆயுதபாணிகள் பின்னர் அங்கிருந்து தப்பிச் செல்லும் வழியில் தேக்கவத்த என்னும் இடத்தில் படையினரை எதிர்கொள்ள நேர்ந்தது. அங்குள்ள ஆலமரம் சோதனை நிலையத்தில் இருந்த படையினர் ஆயுதபாணிகள் மீது தாக்குதல் நடத்தவே இரு தரப்பாரிடையேயும் மோதல் வெடித்தது. அந்த மோதலில் படையினர் தரப்பில் ஒருவர்பலியானார். மற்றொருவர் காயமடைந்தார். மோதலைத்தொடர்ந்து ஆயுதக் குழுவினர் அங்கிருந்து தப்பிச்சென்றனர்.

பின்னர் பஸ் டிப்போவுக்கு விரைந்துசென்ற படையினர் அங்கு எட்டு பஸ்களில் தொடராகப் பொருத்தப்பட்டிருந்த குண்டுகளை மீட்டனர்.

குண்டுகளை வெடிக்கவைக்கும் சாதனங்களும் வயரும் மீட்கப்பட்டன.

வவுனியாவில் சிங்கள இன மக்கள் வசிக்கும் பகுதியில் இந்த பஸ் டிப்போ அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. [ஐ-7-164-21]

### 24 மணி...

(முதலாம் பக்கத் தொடர்)

இருந்து துப்பாக்கியால் சுடப்பட்டதில் அது வெடித்துச் சிதறியது.

அதேவேளை—

நேற்றுப் பிற்பகல் 2.55 மணியளவில் வவுனியா நகரில் வாடிவீட்டுக்கு அருகே மற்றொருமின்மாற்றி குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து பெரும் பகுதிக்கான மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டிருந்தது. எனினும் மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பின்னர் மின் வழங்கப்பட்டது.

## பஸ் ஊழியர் வேலை நிறுத்தம்

1996 முதல் 1998 வரையான காலப் பகுதிக்குரிய இடர்காலக் கொடுப்பனவை வழங்கக்கோரி வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள் நாளை ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

நாளை வேலை நிறுத்தம் இடம்பெறுவதை முன்னிட்டு இன்று செவ்வாய் மாலை சகல இரவுத்தங்கல் சேவைகளிலும்வடபிராந்தியபோக்குவரத்துச்சபை ஊழியர்கள் ஈடுபடமாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள் அனைவரது லீவுகள் யாவும் நாளை 15 ஆம் திகதி முதல் மறு அறிவித்தல் வரை வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தலைமை அலுவலகத்தினால் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. [ஐ-7-15]

### மும்முனை...

(முதலாம் பக்கத் தொடர்)

மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று மாலை வரை கிடைத்த தகவல்களின்படி காயமடைந்த 600 படையினர் வரை அனுராதபுரத்தில் இருந்து கொழும்புக்கு எடுத்து வரப்பட்டிருப்பதாகவும் இதைவிட மேலும் 200 க்கும் அதிகமான படையினர் அனுராதபுரத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த 45 படையினரின் சடலங்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டதாகவும் அவற்றில் மூன்று சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை என்றும் தெரியவந்தது.

இதேவேளை —

புலிகள் தரப்பிலும் பலத்த உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் தமது தரப்பில் 19 போராளிகளே பலியானதாக தெரிவித்துள்ள புலிகள் அவர்களில் நால்வரின் பெயர் விவரங்களை நேற்று அறிவித்துள்ளனர்.

தம்மால் கைப்பற்றப்பட்ட படையினரின் சடலங்களில் 12 சடலங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஊடாகப் படையினரிடம் கையளிக்க முயற்சித்து வருவதாகவும் புலிகள் வன்னியில் அறிவித்துள்ளனர்.

இந்த நகர்வு முயற்சியில் ஏற்பட்ட சேதங்கள் படைத் தரப்புக்குப் பெரும் பின்னடைவு எனக் குறிப்பிட்டுள்ள பாதுகாப்பு விமர்சகர்கள் காயமடைந்த மற்றும் பலியான படையினரின் எண்ணிக்கைப்படி கிட்டத்தட்ட இரண்டு பட்டாலியன் துருப்பினர் களத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டி உள்ளனர். (ஐ-7-21-164)

### வாழ்க்கைச்...

(9ஆம் பக்கத் தொடர்)

கையில் இலங்கையில் ஓய்வூதியம் பெறுவோர் நிர்வாகக் கெடுபிடிகளாலும் ஓய்வூதிய திணைக்களத்தின் அலட்சியப் போக்காலும் பல்வேறு விதமான நெருக்கடிகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் பாடசாலையிலிருந்து ஓய்வுபெற்ற பெண் அதிபர் ஒருவர் கடந்த பதினெட்டு வருடங்களாக தமக்கு ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என முறையிட்டுள்ளார்.

அரசாங்கத்தினால் தற்போது வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியம் மருந்துச் செலவிற்குக் கூடப் போதாமல் உள்ளது எனத் தெரிவித்தார். (ஐ-ரி)

## தராசுகளுக்கு முத்திரையிடல்

கொழும்புத்துறை, செப். 14

சங்கானை பிரதேச சபை உப அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1-30 மணி வரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி நடைபெற்று வருகிறது. (ஐ-30)

## ஈழ அகதிகள் விவரம் பதிவு

புதுடில்லி, செப். 14

இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள ஈழத்தமிழ் அகதிகள் அனைவரும் தமக்கு அருகில் உள்ள பொலீஸ் நிலையங்களில் மீண்டும் தம்மைப் பதிவுசெய்துகொள்ளவேண்டுமென இந்திய உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

1983 ஆம் ஆண்டிலிருந்து 1992 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிகளில் இந்தியாவில் தஞ்சமடைந்த அகதிகளே இவ்வாறு தம்மைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமெனவும்—

பதிவுசெய்யாதவர்கள் அனைவரும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்படுவர் எனவும் இந்திய உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. [ஐ-7-க[

### பலியானோரில்...

(முதலாம் பக்கத் தொடர்)

னையா விஜி—திருமலை)

★ லெப்டினன் றஞ்சினி (சங்கர் இந்திராணி—நெடுங்கேணி)

★ வீரவேங்கை யோகநாதன் (சங்கரன் ஈஸ்வரநாதன்—குருநாகல்) (ஐ-7)

### நல்லூரில்...

(முதலாம் பக்கத் தொடர்)

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று உறவினர்களால் முறைப்பாடுசெய்யப்பட்டது.

நல்லூர் வைமன் வீதியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சுதர்சன் (வயது 23, நல்லூர் முத்தவிநாயகர் வீதியைச் சேர்ந்த சண்முகலிங்கம் இரட்னகுமார் (வயது 29) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

ச. இரட்னகுமாரின் சகோதரர் ஒருவர் கடந்த 9 ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

### மூதூர்...

(முதலாம் பக்கத் தொடர்)

உயிரிழந்ததாகவும்விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

பொலீஸ் நிலையத்தில் இருந்து தம்மால் கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்களில் ஒரு பகுதியின் பெயர் விவரங்களையும் விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

- ★ ஆர்.பி.ஜி — 1
- ★ ஆர்.பி.ஜி எறிகணைகள் — 5
- ★ ஆர்.பி.ஜி ரவைகள் — 5
- ★ ஆர். பி. ஜி தொலைநோக்கி — 1
- ★ ஏ.கே.எல். எம். ஜி — 1
- ★ ஏ.கே.எல். எம். ஜி மகஸின் — 2
- ★ ஏ.கே நடுத்தர ரவைகள் — 7500
- ★ ரி.56 ரக துப்பாக்கி — 3
- ★ 60 மி. மீற்றர் மோட்டார் — 1
- ★ 60மி.மீற்றர் எறிகணைகள் — 10
- ★ மழைக்கவசம் — 5
- ★ சுசுக்கி மோட்டார் சைக்கிள் — 1

என்பனவே கைப்பற்றப்பட்டதாகப் புலிகள் அறிவித்தனர்.

மேற்படி பொலீஸ் நிலையத்தில் இருந்த மின்மாற்றி ஒன்றும் விடுதலைப்புலிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதாகப் படைத்தரப்புத் தெரிவித்துள்ளது. (ஐ-7-21)


DAY CLASS
(பகல்நேர வகுப்பு)
A/L 2000
ஆரம்பம்:
20-09-99 காலை
8-00 மணி (ப. நே.)

| | |
|---|---|
| Acc. | D. SAM |
| Com. | பசில் |
| Eco. | ஜெயக்குமார் |
| Sta. | தவசேகர் |
| Log. | மோகன் |
| Tam | மீரா |
| H.Ci. | ஜோதீஸ்வரன் |
| Hin. | சுரேஸ் |
| Geo. | இக்னேசியஸ் |
| Chr. | மல்லிகா |
| Pol. | லிகோரி |
| Dra | சந்திரன் |

D. M. I.
யாழ் நகர்.
- D SAM
(சி/8923)

பிரமிட் வீடியோ CD வெளியீடுகள்
மறவாதே கண்மணியே
கண்ணோடு காண்பதெல்லாம்
மலபார் போலீஸ்
சுப்பஸோ வீடியோ
149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி/8929)

எமது பிரமிட் வீடியோ CD வெளியீடுகள்
★ கண்ணோடு காண்பதெல்லாம்
★ மறவாதே கண்மணியே
★ கனவே கலையாதே
★ மலபார் போலீஸ்
★ அந்தப்புரம்
★ கண்ணெதிரே தோன்றினாள்
★ மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்
★ பாசம்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்
(சி/8928)

C.I.M.A 2000 May
Stage - I
Classes Commenced on
11 th & 12 th September
Time: 9-00 a.m - 1.15 p.m
Every Saturday & Sunday
Inviting Applications from
B. Com, Management Graduates
For Stage II & III
Between 10-00 a.m -- 12-00 Daily
Contact:
Executive Director,
S.I.A.S,
358, Temple Road,
Nallur, Jaffna.
(69032)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14 - 09 - 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.
இன்று மட்டும்
சிவகுமார், வினித் நடித்த
**மறக்காதேகண்மணி**
(புதிய வெளியீடு)
காட்சிகள்: 10-30, 2-30
(69025)



## ராஜா

யாழ்ப்பாணம்
மம்முட்டி - தேவயானி
மற்றும் பலர் நடித்த
**மறுமலர்ச்சி**
10-30, 2-30
(சி/8841)


## கண்ணீர் அஞ்சலி

எமது தற்போதைய பிராந்திய முகாமையாளர்
திரு. மு. க. சிவபாதவிருதயர்
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி கணபதிப்பிள்ளை கண்மணி**

வவுனியாவில் காலமாகியதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம்.

மக்கள் வங்கி,
யாழ். பிராந்தியத் தலைமையக வட வலய ஊழியர்கள்.
(69044)

## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

**திருமதி பத்மராணி குணாகரன்**

யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் கடந்த 5 ஆண்டுகளாக சிறப்பாகக் கடமையாற்றிய ஆரம்பக்கல்வி ஆசிரியை திருமதி பத்மராணி குணாகரன் அவர்கள் அமரத்துவமான 31 ஆவது நாளாகிய இன்று அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, இவரது இழப்பினால் துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்,
யா/ கொழும்புத்துறை
துரையப்பா வித்தியாலயம்.
(69051)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை
இறுதியாண்டு மாணவி
செல்வி பிறேமறஜனி கார்த்திகேசு
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பரமேஸ்வரி கார்த்திகேசு**

அவர்கள்

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்த தாயே!
கண்மலர் கருணை கொண்ட அன்னையே!
அன்பு பெருகும் ஆனந்த உருவமே!
கண்ணா எனப் பெயரிட்டன்பாய் அழைத்த மகளை
எண்ணாமலே தொலைதூரம் சென்றதேனோ?

நுண்கலைத் துறை
இறுதயாண்டு மாணவர்கள்.
(69042)

## மரண அறிவித்தல்

**திருமதி கண்மணி கணபதிப்பிள்ளை**

அராலி தெற்கு வீரபத்திர கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவில் வசித்தவருமாகிய திருமதி கண்மணி கணபதிப்பிள்ளை அவர்கள் 13-09-99 திங்கட்கிழமையன்று இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு கணபதிப்பிள்ளை (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் க. சிவபாதவிருதயர் (உதவி பிரதேச முகாமையாளர். மக்கள் வங்கி, வவுனியா), திருமதி மு. சிவஞானாம்பிகை (இளைப்பாறிய லிகிதர், கல்வித திணைக்களம், மட்டக்களப்பு), க. சிவகடாட்சம் (லிகிதர், கல்வித் திணைக்களம், வலிகாமம்), க. சிவகுமாரன் (காவல்ப் பகுதி, மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி சி. பிரேமலதா, ப. முருகேசபிள்ளை (தூதரகம், கொழும்பு), திருமதி சி. பத்மாசனி, திருமதி சி. சிவகுமாரி (ஆசிரியை, மட்டக்களப்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற திருமதி செ. பாறுவதம், பொன்னம்பலம் (ஆசிரியர்), திருமதி மா. திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி செல்லமுத்து, மார்க்கண்டு ஆகியோரின் அன்பு மைத்துனியும் நிருத்தன், சம்பந்தன், அபிராமி, அனிந்திதை, நக்கீரன், கட்கதாரணி, பிரபா, வாகினி, அனுசியா, தர்சினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் இன்று (14—9—99) செவ்வாய்க்கிழமை 49/38 K, கோவில் வீதி குருமண்காட்டில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. சிவபாதவிருதயர்,
க. சிவகடாட்சம்
(பிள்ளைகள்)

பத்திரகாளிகோவில் வீதி,
தாவடி.
[69050]

## கௌரவிப்பு விழா

இசை நாடகக் கலைஞர், நாடகச் சக்கரவர்த்தி'' (பப்பா) பரராஜசிங்கம் அவர்களின் 30 ஆவது ஆண்டு இசை நாடக கலைப்பணி நிறைவின் கௌரவிப்பு விழா நாளை புதன்கிழமை இரவு 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

துன்னாலை தெற்கு கிளான் பிரத்தியங்கிலி அருள்மிகு காளிதேவிகோயில் முன்றலில் வே. சிவசிதம்பரம் அதிபர் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன், ஓய்வுபெற்ற கிராம அலுவலர் வி. சேதுநாயகம் உட்பட பலர் பாராட்டுரை வழங்குவார்கள். கலை நிகழ்ச்சியாக ''சத்தியவான் சாவித்திரி'' இசை நாடகமும் இடம்பெறும். (ஐ-109)


கடந்த வாரம் நடைபெற்ற
✠ மாதாந்தப் பயிற்சி வினாத்தாள்கள்
(தரம் 2 — 11 வரை)
வாரம் ஒருமுறை நடைபெறும்
✠ புலமைப்பரிசில் வினாத்தாள்களை
பெற்றுக் கொள்ளவும்.
BOND -- யாழ் நகர்.
(69036)



## நாகம்ஸ்

சுன்னாகம்
அர்ஜுன் - ரம்பா - மீனா
வடிவேலு நடித்த
**செங்கோட்டை**
காட்சிகள் 11.00, 2.30
[ புதிய நேரம் ]
(68977)


## சமுர்த்திக் குழுக்கள்

வலி. வடக்குப் பிரதேச செயலர் பிரிவில்உள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் சமுர்த்திக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பிரதேச செயலரின் பணிப்புரையைத் தொடர்ந்து சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களினால் பகுதிக்கிராம அலுவலர்களுடன் இணைந்து சமுர்த்திக் குழக்கள் அமைக்கப்படும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

சமுர்த்தி ஊக்குவிப்பாளர் இல்லாத இடங்களுக்கு ஏனைய பதில் அலுவலர்களின் உதவியுடன் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சமுர்த்தி ஊக்குவிப்புக் குழுக்களில் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களே இடம்பெற உள்ளனர். (இ-86)

## யா/யூனியன் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்
### அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

யா/யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் 12-09-99 அன்று யூனியன் கல்லூரியில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பு முடிவுகள்.

1 ஆம் பரிசு இல. **2267**
2 ஆம் பரிசு இல. **2290**
3 ஆம் பரிசு இல. **5114**

ஆறுதல் பரிசு இலக்கங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 0881 | 0647 | 4651 | 3620 | 3757 |
| 2346 | 0774 | 1864 | 4469 | 1612 |

சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர்,
யாழ்ப்பாணம் வர்த்தக வங்கி உதவி முகாமையாளர்,
இராமநாதன் கல்லூரி ஆசிரியர் திரு. பாலேந்திரா
ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

சுன்னாகம் இலங்கை வங்கி உதவி முகாமையாளர்
திரு. C. K. சிவபாலன்
அவர்கள் மேற்பார்வையாளராக கலந்து சிறப்பித்தார்.

பரிசிலுக்குரியவர்கள் யா/யூனியன் கல்லூரியில் உள்ள அலுவலகத்தில் இரு வாரங்களுக்குள் தொடர்பு கொண்டுபரிசில்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

செயலாளர்
யூனியன் கல்லூரி ப. மா. ச.
(69047)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் ஆவணி மாதம்
29 ஆம் நாள் (15-09-1999) புதன்கிழமை காலை
8.10மணி தொடக்கம் 9.30 மணி வரையிலுள்ள
சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
**சேந்தன்** B.Sc
(ஆசிரியர், ஹாட்லிக்கல்லூரி)

எமது புத்திரி
**அனுசா**

ஆகிய இருவருக்கும் இறைவன் திருவருள் துணைகொண்டு திருநெல்வேலி
பத்திரகாளி கோயிலில் நடைபெறும் திருமணத்தில் குடும்ப
சமேதராய் வருகை தந்து புதுமணத் தம்பதிகளை
ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன்
அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி வீரகத்திப்பிள்ளை,
பருத்தித்துறை.

திரு. திருமதி செல்லத்துரை,
அரசடிலேன்,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்

(பெண் வீட்டார் அழைப்பு)
(69049)

உ
சிவமயம்

## மங்கைப்பருவ மங்கள நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம்
ஆவணி மாதம் 29 ஆம் நாள் (15-09-99) புதன்கிழமை
பகல் 9.00 மணி முதல் 12.00 மணி வரை வரும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

அருணாசலம் இசக்கிமுத்து செட்டியார் தம்பதிகளின் பேர்த்தியும்
அருணாசலம் செட்டியார் தம்பதிகளின் மகளுமாகிய
திருநிறைசெல்வி
**வினுசங்கீதா**
அவர்களுக்கு

பருவ மங்கள நீராட்டு விழா நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம்
தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து செல்வியை
ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

[illegible]
பருத்தித்துறை,

E. R. டிரான்போட் சேர்விஸ் சகோதரர்கள்
(69045)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திமோருக்கு உடனடியாக சர்வதேச அமைதிப்படை

## ஜனாதிபதி ஹபீபி இணக்கம்

ஜகார்த்தா, செப். 14

கிழக்குத் திமோரில் சர்வதேச சமாதானப் படையை பணியில் ஈடுபடுத்த இந்தோனேசிய அதிபர் ஹபீபி இணக்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அவசரமாகக் கூட்டப்பட்ட இந்தோனேசிய அமைச்சரவையின் கூட்டத்தின் பின்னரே இது தொடர்பான தகவலை ஹபீபி வெளியிட்டார்.

அவரின் முடிவு உடனடியாக ஐ. நா. செயலருக்கு அறிவிக்கப்பட்டது.

அராஜகங்கள் தலைவிரித்தாடும் கிழக்குத் திமோரில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட இந்தோனேசிய அரசு தவறியிருந்தது இந்தோனேசியாவுக்கான ஆயுத விற்பனையை நிறுத்தப்போவதாகப் பிரிட்டன் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் அச்சுறுத்தல் விடுத்ததை அடுத்து ஹபீபி இந்த முடிவுக்கு வந்ந தாக அவதானிகள் தெரிவித்தனர்.

கிழக்குத் திமோரில் சர்வதேச அமைதிப்படையை ஈடுபடுத்துவது குறித்து ஆராய்வதற்காக இந்தோனேசிய வெளியுறவு அமைச்சர் அலி அல்தாஸ் நியூயோர்க் செல்லவுள்ளார்.

அமைதிப் படைகள் எப்போது பணியில் ஈடுபடும் என்பது குறித்தும் இந்தப் படையில் எந்தெந்த நாட்டு இராணுவத்தினர் ஈடுபடுவர் என்பது குறித்தும் தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

இந்தோனேசியாவின் அறிவித்தலை அடுத்து 400 பேர் கொண்ட ஆஸ்திரேலியப்படை இந்தோனேசியா செல்வதற்கு தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளது.

இதே வேளை — கிழக்குத் திமோர் மக்களுக்கு எதிராக இடம் பெற்ற கொடுமை கொடூர சம்பவங்கள் குறித்து விசாரணை செய்ய சர்வதேச போர் குற்றங்கள் விசாரணை நடுவர் மன்றம் ஒன்று தேவை என மனித உரிமைகளுக்கான ஐ. நா. அதிகாரி திருமதி றொபின்சன் கேட்டுள்ளார்.

கடைசியாக இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது தலைநகர் டிலியின் தெற்குப் பகுதியில் உள்ள குன்றுகளில் தஞ்சம் புகுந்திருந்த கிழக்குத் திமோர் மக்கள் பலரை இந்தோனேசிய ஆதரவுப் படைகள் சுட்டுக் கொன்றதா தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-க)

# 100-க்கு மேற்பட்டோர் பங்களாதேஷில் காயம்

## ஆர்ப்பாட்டத்தின் போது

டாக்கா, செப் 14

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் நூறுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்தியாவில் இருந்து அஸாம் போன்ற வட-கிழக்குப் பகுதிகளுக்கு பங்களாதேஷ் நிலப்பரப்பின் ஊடாக பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதிப்பது எனப் பங்களாதேஷ் அரசு தீர்மானித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க் கட்சிகள் நடத்திய ஆர்ப்பாட்டத்திலேயே நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

பல்லாயிரக் கணக்கான எதிர்க்கட்சி ஆதரவாளர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க தடியடிப் பிரயோகம் செய்து கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர்.

இதேவேளை — எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

(இ-க)

# சீனாவிடம் கோரிக்கை

வாஷிங்ரன், செப். 14

தாய்வானுடனான முரண்பாடுகள் யுத்தமாக மாறுவதை தடுத்து நிறுத்துமாறு அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் சீனாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சீன ஜனாதிபதி சியாங் செமினுடன் பேச்சு நடத்தியதைத் தொடர்ந்தே அவர் இவ்வாறு கூறினார்.

ஒரே சீனக் கொள்கையை ஆதரிப்பது இல்லை எனதாய்வான் கூறியதை தொடர்ந்து தாய்வானுக்குஎதிராகஇராணுவ நடவடிக்கை எடுக்கப் போவதாக சீனா எச்சரித்திருந்தமை தெரிந்ததே.

## நேபாளத்தில் நடைபெறும்

# இந்து-பௌத்த மாநாட்டுக்கு பௌத்தர்கள் எதிர்ப்பு

காட்மண்டு, செப். 14

எதிர்வரும் நவம்பர் மாதம் நேபாளத்தில் நடைபெறவுள்ள இந்து — பௌத்தமத மாநாட்டுக்கு பௌத்த மதத்தினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

நேபாளத்தில் புத்தர் பிறந்த இடத்தில் இந்த மாநாட்டை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்து—பௌத்த மதங்கள் சருணையையே கொள்கையாகக் கொண்டவை என்ற நிலையைப் புலப்படுத்துவதே இந்த மாநாட்டின் நோக்கம்.

இதேவேளை —

பௌத்த மதத்திற்கு என தனி அடையாளம் உண்டு அதை இன்னொரு மதத்தின் ஒரு பிரிவு என எடுத்துரைக்க எவரும்முயல்வதைப் பொறுத்துக் கொள்ள மாட்டோம் என நேபாளத்தின் பிரதான பௌத்தமத அமைப்பான தர்மோதைய சபை தெரிவித்துள்ளது.

(ஐ-க)

# 200 பலஸ்தீனக் கைதிகளை இஸ்ரேல் விடுதலை செய்தது

ஜெருசலேம், செப். 14

பலஸ்தீன கைதிகள் 200 பேரை இஸ்ரேல் விடுதலைல் செய்துள்ளது.

தெற்கு இஸ்ரேலின் சிக்ஸ்மா சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த இந்தக் கைதிகள் நான்கு பஸ்களில் அழைத்துச் செல்லப்பட்டு மேற்குக் கரையின் எல்லைப் பகுதியான காஸாவில் ஒப்படைக்கப் பட்டனர்.

கடந்த சனிக்கிழமைஇஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்துக்கு இடையில் கைச்சாத்திடப்பட்டதிருத்தப்பட்ட 'வைநதி' ஒப்பந்தத்தின் கீழ் இஸ்ரேல் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-க)

## உலக அரங்கில்

# 8 மாடிக் கட்டடம் இடிந்து வீழ்ந்தது

## ரஷ்யாவில் 30 பேர் பலி

மொஸ்கோ, செப். 14

மொஸ்கோவில் நேற்று எட்டு மாடிக் கட்டடம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 30 பேர் வரை உயிரிழந்தனர் பலர் காயமடைந்தனர்

கடந்த 8 ஆம் திகதி மொஸ்கோவில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இறந்தவர்களை நினைவுகூரும் முகமாக நேற்று திங்கட்கிழமை துக்கதினமாக அரசு பிரகடனப்படுத்தியிருந்தது இந்த நாளிலேயே மீண்டும் ஓர் அனர்த்தம் நிழ்ந்துள்ளது

மேற்படி சம்பவத்துக்கு டாகிஸ்தான் கிளர்ச்சியாளர்களே காரணம் என ரஷ்ய இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தக் கட்டடத்தில் 120 பேர் வரை வசித்து வந்ததாக பதிவுகள் தெரிவிப்பதால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை கட்டட இடிபாடுகளில் இருந்து எவரையும் மீட்டு எடுக்கமுடியாத நிலைமை இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-க)

# படையினரோ அல்லது வேறு எவரோ லஞ்சம் பெற்றால் முறையிடுங்கள்!

## பயணிகளுக்கு சிவில் அதிகாரி அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப். 14

குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்கு விமான மூலம் செல்லும் பயணிகளிடம் போக்குவரத்து ஏற்பாடுகளுக்காக படையினரோ அல்லது வேறு எவரோ லஞ்சம் பெற்றால் அது தொடர்பான விவரங்களைத் தருமாறு யாழ் சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி கோரியுள்ளார்.

பயண ஏற்பாடுகளுக்காக லஞ்சம் பெறப்படுவதாக வெளிவந்த தகவல் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும்தெரிவித்ததாவது:

பயண ஏற்பாடுகளுக்காக படையினர் மற்றும் முகவர்கள் பணம் பெறுவதாகஅநாமதேயக் கடிதம் எமக்கு கிடைத்தது. அந்தக் கடிதம விசாரணைக்காக இரகசியப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுளளது. அவர்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அந்த விசாரணைகளின் பேரில் எவராவது கண்டு பிடிக்கப்பட்டால் அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படும.

போக்குவரத்து அனுமதி பெறும் விடயத்தில் பொது மக்களின் ஒத்துழைப்பு எமக்குத் தேவையாக உள்ளது. இதற்காக எவராவது லஞ்சம் கோரினால் உடனடியாக சிவில் நிர்வாக அலுவலகத்துக்குத் தகவல் தரவேண்டும்.

பொலீஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யலாம்.

தகவல் தருபவர்களின் விவரங்கள் இரகசியமாகப் பேணப்படும்—

இப்படி அந்த அதிகாரி தெரிவித்தார். [இ-க]

## விபத்தில் பாதிக்கப்பட்ட

# சீவல் தொழிலாளிக்கு ரூ. 60 ஆயிரம் நஷ்டஈடு

வலி கிழக்கு, செப 14

விபத்தினால் பாதிக்கப்பட்ட சீவல் தொழிலாளிக்கு வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசம் 60 ஆயிரம் ரூபாவை நஷ்டஈடாக வழங்கியுள்ளது

இருபாலை கிழக்குப் பகுதியைச் சேர்ந்த க. வேலுப்பிள்ளை என்ற சீவல் தொழிலாளிக்கே இந்த நஷ்டஈடு வழங்கப்பட்டது.

இம்மாதம் முதலாம் திகதி கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க அலுவலகத்தில் வைத்து கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் (கணக்காய்வு) திருமதி கோ. திருநாவுக்கரசு இதனை வழங்கினார்.

இந்தத் தொழிலாளி தொழிலுக்குச் சென்ற சமயம் அண்மையில் குண்டுவெடிப்புச் சம்பவதில் தனது பார்வையை இழந்திருந்தார்.

கோப்பாய் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் யோ. மரிசிலின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சமாசத்தின் தலைவர் க. பொன்னுத்துரை, பொதுமுகாமையாளர் இமனுவல், சமாசத்தின் செயலாளர் நா. கணேசன் உட்பட தலைமை அலுவலகப் பரிசோதகர்கள், நிர்வாகிகள், சங்க அங்கத்தவர்கள் என பலரும் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர். (இ-க)


## கண்ணீர் அஞ்சலி

குணசிங்கம் ஞானேந்திரன்

(கண்ணன் - குட்டி)

உரிமையாளர், கோபிகா ஆடையகம்

அவர்களின் மறைவை முன்னிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைச் செலுத்துகின்றோம்,

மாருதி ரெக்ஸ்

இல. 01, பஜார் வீதி. யாழ்ப்பாணம்.

[69037]

## கண்ணீர் அஞ்சலி

10-09-99 அன்று அமரத்துவம் எய்திய எமது அன்பு நண்பன்

கோபிகா ஆடையக உரிமையாளர்

குணசிங்கம் ஞானேந்திரன்

(கண்ணன் - குட்டி)

எம் இனிய கண்ணனே!
எம்மை எல்லாம் பரிதவிக்க விட்டு
எங்கு நீ பறந்து சென்றாய்?
நல்லைக் குமரனவன், அழைத்தது ஏன் தன்னிடத்தில்
நயினை மண்ணிலிருந்து நாம் துடிக்கின்றோம் உன் பிரிவு கேட்டு.

உன் குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினர், நண்பர்களுக்கும் உமது ஆத்மா சாந்தியடைய நயினை நாகபூசணி அம்பாளை தினமும் வேண்டிப் பிரார்த்திக்கின்றாம்.

உன்பிரிவால் துடிக்கும்

நயினை நண்பர்கள்,

சுதா, செந்தில், ஜெயா.

நயினாதீவு. (69028)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

166/3 சேர் பொன். இராமநாதன்வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்ட பாலசிங்கம் பிரசாந்தனன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (731981230V) விசேட அடையாள அட்டை, உத்தியோக அடையாள அட்டை என்பன (நீல நிற உறையுடன்) நாவற்குழி சோதனைச் சாவடிக்கும் நல்லூருக்கும் இடையில்12-9-99 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (69005)

கணேஸ்வரன் சிந்துஜா என்பவரது விசேட அ. அட்டை (இல. 0903038333) பாடசாலை அ. அட்டை இரண்டும் 10—9—99 அன்று கல்வியங்காட்டுச் சந்திக்கும் 3 ஆம் கட்டைக்கும் இடையில் ஒரு கைப்பையுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து குமார் தொலைத் தொடர்பு நிலையம் 3 ஆம் கட்டை, கல்வியங்காடு என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும் T. P. 021 - 3051 அல்லது 021 - 2680 (69015)

## விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள தண்ணீர் இறைக்கும் இயந்திரமும் வீட்டுப் பாவனைப் பொருள்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு. ச. சபாபதி கத்தாப்படி வீதி, நுணாவில் மத்தி, சாவகச்சேரி. (கண்டி றோட்டுக்கு அண்மையில்) (69011)

31,HP – Harrisons Lister எஞ்சின் (Mede in England) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நாதன்ஸ் கூல்பார், சங்கத்தானை. அல்லது சிவம் மீனாட்சி இரும்பு தொழிற்சாலை, சங்கத்தானை. (சி/8914)

கட்டில், மேசை, சோக்கேஸ், Fan, தையல் மெஷின், உரல், அம்மி மற்றும் வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K. சபாரத்தினம் 471, K.K.S. வீதி, வண்ணார்பண்ணை(69019)

## யாழ்ப்பாணம்

ஆசிரியர் தினவிழாவில் நடிப்பதற்குப் பொருத்தமான ஏழு நாடகங்களைக் கொண்ட நூல். அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய யாழ்ப்பாணமா? கொழும்பா? அவற்றை நடிக்கும் முறையும் அதில் அடங்கியுள்ளது. ரூபா 50. (69014)

## கைமாறிவிட்டது

கோணாவளை ஒழுங்கை கொக்குவிலைச் சேர்ந்த சிவ. ஆறுமுகசுவாமி (J.P) என்பவரின் புத்தம் புதியலுமாலா ஆண்களுக்கான துவிச்சக்கர வண்டி திருநெல்வேலிச் சந்தையில் கடந்த வியாழன் தவறுதலாக கைமாறி விட்டது. இதனை மாறி எடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (சி/8918)

## திருத்திக் கொடுக்கப்படும்

சகல கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ், மூக்குக் கண்ணாடி ஒட்டுதல் புகைப் படத்துறை துணைச் சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சு. நாராயணசாமி 301, கஸ்தூரியார் வீதி, (மேல் மாடி) கன்னாதிட்டிச்சந்திக்கு அருகில். (69010)

## அறநெறிபாடசாலை ஆரம்பம்

கொழும்புத்துறை, செப்.14

நுணுவில் சிதம்பர விநாயகர்ஆலயத்கில் 'விநாயகர் அறநெறிப்பாடசாலை' அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேற்படி ஆலய பரிபாலன சபையினரின் ஆதரவில் இந்த பாடசாலை செயற்பட்டு வருகிறது. (இ-ரி)


## இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி புறொயிலர் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: கே. அழகரட்ணம், நீர்வேலி தெற்கு, கந்தசாமி கோயில் வடக்கு வீதி, T P. NO. 070 — 212354 070 — 212383. (68726)

## SPOKEN ENGLISH

சுலபமான முறையில், சிறு பிரிவாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில (வகுப்புக்கள் புதன், வியாழன், சனி, ஞாயிறு) ஆசிரியர்: ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, இல. 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.(69020)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 — 07 — 1936

மறைவு 14 — 09 — 1997

அமரர் **ஆறுமுகம் தம்பையா** B. Sc.
(இளைப்பாறிய உப அதிபர் யா/தேவரையாளி இந்துக் கல்லூரி)

அன்பு அப்பா,
உங்கள் பிரிவால் எங்கள் கனவுகள் கலைந்து
போயின, உங்கள் நினைவுகள் நிலைத்து நிற்கின்றன.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

– குடும்பத்தினர்.

தகவல்: சண் — சாந்தி (கவிஸ்),
மலையந்தோட்டம்,
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை. (69021)

---

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் ஆவணி மாதம் 30 ஆம் நாள் [16 — 09 — 1999] வியாழக்கிழமை முற்பகல் 08 மணி 30 நிமிடம் தொடக்கம் 10 மணி 30நிமிடம் வரையுள்ள தனுலக்கின சுப முகூர்த்த நல் வேளையில்,

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**இந்திரசித்**
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
**அனுஷா**
அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு. நா. விநாயகமூர்த்தியும்,
பாரியாரும்,
மக்களும், மருமக்களும்.
சுழிபுரம் வடக்கு.

திரு, ச. விநாயகமூர்த்தியும்,
மக்களும்,
மருமக்களும்.
சுழிபுரம் வடக்கு.

(இரு வீட்டார் அழைப்பு) [69027]

---


உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் ஆவணித் திங்கள் 29ஆம் நாள் (15-09-99) புதன்கிழமை காலை 9.46 மணி முதல் 10.08 மணி வரையுள்ள விசாக நட்சத்திரமும், துலா இலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

எமது புதல்வன்
திருநிறை செல்வன்
**உதயகுமார்**
அவர்களுக்கும்



எமது புதல்வி
திருநிறை செல்வி
**மங்களவதனி**
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு நல்லூர் திவ்விய ஜீவன சங்கமண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பு உபசாரம் மணமகள் இல்லத்தில் 18-09-1999 சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறும்.

[இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திருமதி ஆ. அம்பலவாணர்,
21, ஈஸ்வரன் லேன், மட்டக்களப்பு.
திரு. திருமதி த. சண்முகநாதன்,
75, அம்மன் றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

திரு. திருமதி மு. குணரத்தினம்
குரும்பசிட்டி, தெல்லிப்பழை.
திரு. திருமதி ஆ. மகாதேவன்,
[illegible],
[illegible]

(69030)

---

# பாராட்டுகின்றோம்

எமது கல்லூரி மாணவன்
**கமலநாதன் டினேஸ்**
அவர்கள்

தேசிய இளைஞர் சேவை விவகார அமைச்சின் தேசிய மட்டத்திற்கான அணித் தெரிவுக்கு தெரிவு செய்யப்பட்டு எமக்கும் எமது பாடசாலைக்கும் பெருமை தேடித் தந்தமையை இட்டுப் பாராட்டுகின்றோம்,

ஆசிரியர்கள், மாணவர்கள்,
2000 A/L வர்த்தகம்.

யா/ யூனியன் கல்லூரி. (69055)

---

# எழுது வினைஞர் போட்டிப் பரீட்சை

★ ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள இப்பரீட்சைக்கான துரித பயிற்சி வகுப்புக்கள்.
★ இவ் வகுப்புக்கள் 30 மணித்தியாலங்கள் நடைபெறும்.
★ அச்சடித்த பாடக்குறிப்புக்கள் இலவசமாக வழங்கப்படும்

ஆரம்பம்: 18-09-99 (பி. ப. 2 மணி)

ஆசிரியர்: அ. குமாரவேல்

**புதிய உயர் கல்லூரி,**
ஆரியகுளம் சந்தி, யாழ்.

(69013)

---

உ
சிவமயம்

# ENGLISH
## For School Leavers

க. பொ. த. உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு அவரவர் தராதரத்திற்கேற்ப மிகச்சிறிய குழுக்களாகப் பிரித்து புதன்,ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் பிரத்தியேக வகுப்புகள் நடத்தப்படும்.

25 - 09 - 99 -க்கு முன்பதாக சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும். ஒக்ரோபர் மாதம் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் திகதிகளில் தராதரப் பரீட்சை நடத்தப்படும்.

வகுப்புகள் 11 – 10 – 99 இல் ஆரம்பிக்கப்படும்.
பரீட்சைக் கட்டணம்: 15 ரூபா.

ச. தி. சண்முகநாதன்,
230, சட்டநாதர் வீதி,
நல்லூர்.
[முடமாவடிப் பக்கம்]

[68806]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி. தென்மேற்கு செயலர் பிரிவில் 800 ஹெக்டேயரில் நெற்செய்கை

வலி. தென்மேற்கு, செப் 14
1999–2000 பெரும்போக நெற் செய்கையை 800ஹெக் டேயரில் மேற்கொள்ள சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஆயிரத்து 45 ஹெக்டேயர் நிலத்தில் பயிரிடக்கூடிய வசதிகள் இருந்தும் 775 ஹெக்டேயர் நிலப்பரப்பிலேயே கடந்தவருடம் நெற்செய்கைமேற் கொள்ளப்பட்டதாகவும்—

270 ஹெக்டேயர் விவசாயத்துக்குரிய நிலம் பாதுகாப்புக்காரணங்களினாலும், விவசாயிகள் முற்றாக மீளக் குடியமராததாலும் கைவிடப் பட்டுள்ளதாகவும்—

இந்த வருடம் வலி. தென் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அனைத்து விவசாயச் சம்மேளனங்களையும் ஊக்குவித்ததனால் 800 ஹெக்டேயரில் நெற்செய்கை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளதாகவும்— பிரதேச செயலர் கா. சந்திரராசா தெரிவித்தார்.

[இ-185]

## போக்கு வரத்துக்கு திறந்து வைப்பு

கடந்த நான்கு வருடங்களாக வாகனப் போக்குவரத்துக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு அரணுக்கு வெளியே உள்ள இத்தாவிலுக்குச் செல்லும் வீதி கடந்த வியாழக்கிழமை முதல் வாகனப் போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

[ஐ-117]

## மாகாணக் கல்வி அமைச்சின்
# இடம்பெயர் சேவைக்கு இங்கு ஏற்பாடுகள்

வலிகாமம் தெற்கு, செப். 14
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் யாழ். மாவட்டத்துக்கான இடம்பெயர் சேவை இம்மாதம் 19 ஆம் திகதியில் இருந்து 30 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய கல்வி வலயங்களில் இக்காலகட்டத்தில் இடம்பெயர் சேவை நடத்தப்படும்.

வடக்கு —கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் பலரும் இச்சேவையின் போது பிரசன்னமாகியிருப்பர்.

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தோருக்கான இவ்விடம்பெயர் சேவை இம்மாதம் 23 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறும்.

ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்விச் சேவையுடன் தொடர்புடைய பல்வேறு பிரிவினர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு இதன் போது சுமுகமான தீர்வு காணப்படும்.

பிரச்சினைகளுடன் தொடர்புடையவர்கள் தங்கள் முறைப்பாடுகளை செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்பாக எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார்.

பிரச்சினைகளுடன் தொடர்புடைய முறைப்பாடுகளை உரிய நேரத்தில் சமர்ப்பிக்காதவர்கள் எக்காரணங்கொண்டும் நடமாடும் சேவையின் போது அவர்களது பிரச்சினைகள் மீது கவனம் செலுத்தப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஐ-152)

## திறப்பு விழா

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை மாடிக் கட்டடத் திறப்பு விழா நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது

பாடசாலை அதியர் எஸ். சிவநடராசா தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்விவலயப் பணிப்பாளர் வீ. இராசையாவும் சிறப்பு விருந்தினராக உடுவில் உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தனும் கௌரவ விருந்தினர்களாக கட்டடப் பரிசோதகர் ஆ. நாகேந்திரம் ஆர். தங்கப்பிரகாஷம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(இ-86)

## தீவகத்துக்கு அரிசி, சீனி

நெடுந்தீவு பலநோ. கூ. சங்கம் பங்கீட்டு அட்டைகளுக்கு விநியோகிப்பதற்கென 10 ஆயிரம் கிலோ அரிசி, 5 ஆயிரம் கிலோ சீனி ஆகியவற்றை யாழ். நகரில் இருந்து எடுத்துச் சென்றுள்ளது.

'உ' 'இ' அட்டைகளுக்கு விநியோகிக்க வன யாழ். செயலகம் இவற்றை வழங்கியதாக சங்கவட்டாரங்கள் தெரிவித்தன.

'உ' பங்கீட்டு அட்டைக்கு பத்துக்கிலோ அரிசி, 2கிலோ சீனியும் 'இ' அட்டைக்கு ஐந்து கிலோ அரிசி, 2 கிலோ சீனி என்பனவும் வழங்கப்படும்.

(ஐ-111)

# மட்டக்களப்புப் பகுதியில் ஒரே சூலில் 3 குழந்தைகள்
## ஒரு குழந்தைக்கு 2 தலைகள்!

மட்டக்களப்பு, செப்.14
இளம் தாயொருவர் ஒரே சூலில் மூன்று ஆண் குழந்தைகளைப் பிரசவித்த சம்பவம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இந்த மூன்று குழந்தைகளில் ஒன்று இரு தலைகளுடன் பிறந்தது எனினும், பிறந்து 20 நிமிடங்களில் இந்தக் குழந்தை இறந்து விட்டது.

ஏனைய இரு குழந்தைகளும், தாயும் நலமாக இருப்பதாக மட்டக்களப்பு வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-7-21)

# கிளாலிக்குப் பஸ் சேவை

தென்மராட்சி, செப். 14
வடபிராந்திய போக்குவரத்துச்சபை கோண்டாவில் டிப்போவினால் நாளை புதன்கிழமை முதல் கிளாலிக்கு பஸ் சேவை நடத்தப்படஇருப்பதால் கடந்த நான்கு ஆண்டுகளாக பொதுமக்களின் பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த எழுதுமட்டுவாழ்–கிளாலி வீதிஇன்று முதல் திறக்கப்படவுள்ளது.

இந்த வீதி மூடப்பட்டிருந்ததால் கிளாலிப் பகுதி மக்கள், மாணவர்கள், விவசாயிகள் முகமாலைவரை நடந்தும் சைக்கிளிலும் வந்து தமது பயணங்களை மேற் கொண்டனர்.

இந்தப் பகுதி கிராமிய அபிவிருத்திச் சங்கம் விடுத்த வேண்டுகோளையடுத்து இந்த வீதி பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடப்படவுள்ளது.

தினமும் பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் பஸ் கிளாலியில் தங்கிவிட்டு மறுநாள் காலை 7.00 மணிக்குப் புறப்பட்டு முகமாலை வரை சென்று அங்கிருந்து சாவகச்சேரி வரைபாடசாலை சேவையாக வந்து யாழ்ப்பாணம் செல்லும்.

(இ.21)


## பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பு

| | |
|---|---|
| பிரதமகுரு: | தாணு வாசுதேவக் குருக்கள் (கோண்டாவில்) |
| சாதகர்: | தாணு மஹாதேவக் குருக்கள் (இணுவில்) |
| ஆலயகுரு: | சோ. இலட்மிநாராயண சர்மா |
| உப சாதகர்கள்: | ம. தாணு நாதக் குருக்கள் (இணுவில்) |
| | ம. ஸ்ரீவஸ்தாங்க சர்மா (இணுவில்) |
| | கு. பங்குச சர்மா (அரெழு) |
| | பொன். வரதராஜக் குருக்கள் (கல்வியம்பதி) |
| | இரங்க. வரதராஜக் குருக்கள் (கொக்குவில்) |
| | லோக. ரஞ்சித குருக்கள் (நீராவியடி) |
| | சோம. அரவிந்த குருக்கள் (இணுவில்) |

ஆகிய குருமார்களுக்கு சங்கானை நிற்சாமம் ஞான வைரவர் கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடாத்திய தற்காக ஆலய பரிபாலன சபையினர் மலர்மாலை சூட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவித்து குருஆசி பெற்று மகிழ்ந்தனர்.

சுபம்
பரிபாலன சபை
ஞான வைரவர் ஆலயம்,
சங்கானை – நிற்சாமம்
(60009)


# கலைகளை மதிக்காத சமூகத்தில் காட்டுமிராண்டித் தனம் வளரும்
## நூல் வெளியீட்டு விழாவில் உரை

கலைகளைப் போற்றுகின்ற மதிக்கின்ற சமூகம் உயர்வு பெறும். அவற்றை மறந்த சமூகத்தில் காட்டுமிராண்டித்தனம் வளரும். கலைஞர்கள் மேதைகள் அவர்களைப் போற்றவேண்டும். வாழும் போது ஊக்குவித்துக் கௌரவிப்பதுடன் அவர்களது வறுமையை நீக்க உதவுவதும் நமது கடமையாகும்.

செல்லையா மெற்றாஸ் மெயில் எழுதிய "1999இல் வாழ்ந்துகொண்டிருக்கும் இசை நாடக – கூத்து மூத்த கலைஞர் வரலாறு" நூல் வெளியீட்டுவிழாவில் மதிப்புரை ஆற்றிய யாழ். பல்கலைக்கழக நுண் கலைப் பீடத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் இவ்வாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சங்கீதபூஷணம் கு. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திருமதி நாச்சியார் செல்வநாயகம் தொடர்ந்து கூறியதாவது:

தாளலயம் இணையும் போது அது ஆன்மீகமாகிறது. அந்தவகையில் இறைவனுடன் எம்மை ஒன்றிணைக்க இந்தக் கூத்துக்கள் உதவுகின்றன. இவற்றின் ஆரம்பக்கட்டம் சமயச் சடங்குகளின் தோற்றமாக இருந்தது. விஞ்ஞானிகள்கூட கலையால்தான் ஆறுதலடைகின்றனர். கலை, வரலாற்று வடிவம் பெறும்போது மானிடத்தின் முத்திரையாக அமைகிறது. தமிழர்களுக்கு பாரம்பரிய கலாசாரம் உண்டு. என்பதைக் கலைகளினால் தான் வெளிக்காட்ட முடியும் என்றார்.

சங்கீதபூஷணம் கணபதிப்பிள்ளை தமது தலைமையுரையில் கூறியதாவது:

யாழ்ப்பாணத்தில் சிறந்த கலைஞர்கள் பலர் தோன்றி எமது சிறப்புக்களை எடுத்துக்காட்டியுள்ளனர். முன்னர் சமய விழாக்களாக கோயில்களில் வளர்ந்த எமது நாட்டுக்கூத்து, நாடகம் போன்றவை மீண்டும் அவ்வாறு வளர்த்தெடுக்கப்பட வேண்டும். பேராசிரியர்கள் வித்தியானந்தன், சிவத்தம்பி, சண்முகதாஸ், காரை சுந்தரம்பிள்ளை. சிவலிங்கராசா போன்றவர்கள் எமது இந்தக் கலைகள் குறித்து ஆய்வுகள் செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தமதுரையில் கூறியதாவது:

எமது கலை கலாசார பாரம்பரியங்களைப் பாதுகாப்பதற்காக இன்று எமது சமுதாயம் போராடிக்கொண்டிருக்கிறது. இந்தக் கலைகளை அழியாமல் பாதுகாத்து நாளைய சந்ததியிடம் ஒப்படைக்கவேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு.

யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் ஆய்வுப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் தமது உரையில் கூறியதாவது:

எமது கலைஞர்கள் மறைந்த பின்னர் அவர்கள் குறித்த விவரங்களைத் தேடுவதைவிட இருக்கும்போது அவர்களை நேரில் காண்பது மகிழ்ச்சிக்குரிய விடயம். நூலில் காணப்படும் கலைஞர்கள் வரலாறு தேடி எடுக்கப்பட்டது. நாளை இக்கலைஞர்களின் வரலாற்றைத் தேடிச் செல்லாமல் இவர்களின் வாழ்வு எப்படி இருந்தது, கலைகளுக்கு இவர்கள் ஆற்றிய பணிகள் எவ்வாறு இருந்தன என்பதை அறியும் வாய்ப்பாக இந்த நூல் தரப்பட்டுள்ளது —

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் செ. பாலச்சந்திரன் பேசும்போது கூறியதாவது:

பிரதேச வேறுபாடின்றிக் கலைஞர்களைத் தேடிக்கண்டு அவர்களின் கலைச்சேவை குறித்த விவரங்கள் இந்நூலில் தரப்பட்டுள்ளன.

நூலாசிரியர் செ. மற்றாஸ் மயில் பதிலுரை நிகழ்த்தினார்.

யாழ். மாநகர சபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம், விவசாய பீடத் தலைவர் பேராசிரியர் சு. மோகனதாஸ், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வீ. கிருஷ்ணசாமி, யாழ். வலய கல்விப் பணிப்பாளர் நா தணிகாசலம், வைத்திய கலாநிதி வை. தியாகராசா சி. செல்வராசா ஆகியோரும் உரையாற்றினர்.

(இ-111)


## நன்றி நவிலல்

நல்லூர் முருகன் வருடாந்த உற்சவத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் 16–8–99 முதல் 11–9–99 வரை நடத்திய தெய்வீக இசை நிகழ்ச்சிக்கு துர்க்கா மணிமண்டபத்தை தந்துதவிய தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தினருக்கும், நாளாந்த நிகழ்ச்சிகளை புத்தக உருவில் அச்சிட்டு வெளியிட உதவிய 'மெடி எயிட்ஸ், விஜய் சில்க்' ஸ்தாபனத்தினருக்கும், தினமும் நிகழ்ச்சி பற்றிய விவரங்களை தவறாது பிரசுரித்த 'உதயன்' பத்திரிகையினருக்கும், இந்நிகழ்வுகளில் பங்குபற்றிய கலைஞர்கள், இரசிகர்கள் அனைவருக்கும் அகில இலங்கை இளங்கலைஞர் மன்றம் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றது.

- செயலாளர்

(69016)

## உதயம் தொலைத் தொடர்பகம்

மக்கள் நலன் கருதி
குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை

- உள்ளூர் இலக்கம் – 021 - 3208
- வெளியூர் இலக்கம் – 0094 21 - 3208
- உள்ளூர் கட்டணம் – 6.00 ரூபா
- வெளியூர் கட்டணம் – 90 ரூபா
- வெளியூரில் இருந்து வரும் கட்டணம் - 2.50 சதம்

குறிப்பு: இரு வாரங்களுக்கு அழைப்புக் கட்டணம் இலவசமாக விடப்படும்.

இரவு – பகல் சேவை தங்குமிட வசதியுண்டு.

ஆரம்பம்: 15 – 09 – 1999
இடம்: சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை
(69012)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட அ. அட்டை தொலைத்தோர் மீளப்பெற முடியாத நிலையில் அவதி

வலி. வடக்கு, செப். 14 யாழ். மாவட்டத்தில் விசேட அடையாள அட்டைகளைத் தொலைத்தோர் ஒன்பது மாதங்களுக்கு மேலாகியும் கூட மீண்டும் விசேட அடையாள அட்டைகளைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர்.

விசேட அடையாள அட்டையைத் தொலைத்தவர்கள் பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளதுடன் அயலில் உள்ள இராணுவ முகாம்களுக்குச் சென்றும் கையொப்பம் இட்டும் வருகின்றனர்.

விசேட அடையாள அட்டை தொலைத்தவர்களுக்கு அவற்றை மீள வழங்கும் நடைமுறைகள் குறித்து எவ்வித அறிவிப்புகளும் கிடைக்காமையால் தொலைத்த பொதுமக்கள் குறிப்பாக இளவயதினர் பல்வேறு சிரமங்களுக்கும் உள்ளாகி வருகின்றனர். (ஐ-86)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 23 — 10 — 1962

உதிர்வு: 06 — 09 — 1997

அமரர்

**பழனிவடிவேலு அசோக்குமார்**

திதி: ரிஷி பஞ்சமி 14 - 09 - 99

ஒரு நொடியில் உம் உறவு
இடியாக வந்ததையா உம் பிரிவு
இன்றுவரை உமை நினைத்துத் துடிக்கின்றோம்.
தனியனாய்த் தவிக்கின்றோம்
தங்கள் முகம் காணாமல்
ஈராண்டு சென்றாலும் ஓயவில்லை உம் நினைவு
எம் கனவை ஒரு கணத்தில் கலைத்தவன்
காலனவன்
காலங்கள் கடந்தாலும் கலங்குதையா
எம் கண்கள்
விடையேதும் கூறாமலே விண்ணுலகு
சென்றீர்களே!
இவ்வுலகில் நாம் வாழும்வரை உங்களை
மறவோம்.

அன்பு மனைவி: அ. செல்வராணி
பிள்ளைகள்: நிவானந்தன், நிவானந்னி

சரணவாய் தெற்கு,
கரவெட்டி.

[68975]

## விருது வழங்கலும் கலந்துரையாடலும்

ஏழாவது சுதந்திர இலக்கிய விழாவின் விருது வழங்கும் வைபவமும் கலந்துரையாடல் நிகழ்வும் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கொழும்பு ஜோன் டி சில்வா நினைவு அரங்கில் இடம்பெறவுள்ளன.

1997 -- 98 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் வெளியாகியுள்ள சிங்கள, தமிழ் மொழிகளில் பிரசுரமாகியுள்ள சிறுகதை, நாவல், கவிதை மொழிபெயர்ப்பு இலக்கியம் பற்றிய பகிரங்க கலந்துரையாடல் அங்கு இடம் பெறும்.

அறிஞர்கள், ஆய்வாளர்கள் சுதந்திர இலக்கிய விழா நூல் மதிப்பீட்டுக் குழுவினர் உட்படப் பலர் இந் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-ரி)

## சிகிச்சை முகாம்

பண்டத்தரிப்பு வைத்திய சாலையில் சமீபத்தில் நடைபெற்ற மருத்துவச் சிகிச்சை முகாமில் 400- க்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கண் பரிசோதனை, குழந்தைகளுக்கான சிகிச்சை, வெளிநோயாளர் பகுதி சிகிச்சை ஆகியவை நடத்தப்பட்டன. (ஓ-139)

## உரிமை கோரப்படாத மாடு

எமது நிலைய அதிகார பிரதேசத்தில் கட்டாக்காலியாக பிடிபட்ட எருது மாடு ஒரு மாத காலமாக உரிமை கோரப்படாமல் உள்ளது. மாட்டிற்கான உரிமையாளர் மூன்று நாள்களுக்குள் தகுந்த ஆதாரத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பெரும்பாக உத்தியோகத்தர்
கமநல கேந்திர நிலையம்.
புத்தூர்.

[69022]

## 31 ஆம் நாள் நினைவலைகள்



அமரர்

**முருகர் அழகரத்தினம்**

(ஓய்வுபெற்ற நிலஅளவைப் படவரைஞர்)

மலர்வு 1937-09-30

உதிர்வு 1999-08-15

வாழ்நாளில் யாரிடமும் நற்பெயர் தான் கேட்டீரே
வாழ்ந்தவரை யாவருக்கும் புத்திமதி சொன்னீரே
வாழ்வதனை முடிக்கவென்று தீரா நோயும் வந்ததுவோ?
வாழ்ந்ததுதான் போதுமென்று வானுலகம் சென்றீரோ
ஓரிரு மாதமென்ன நூறாண்டு சென்றாலும்
மறக்குமோ நின் நினைவலைகள்.

மனைவி, பிள்ளைகள் உறவினர்கள்.

82, மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

(69018)

## நீங்காத நினைவில் ஓராண்டு



**திருமதி பூமணி சின்னத்துரை**

மலர்வு: 13 - 01 - 19[illegible]

உதிர்வு: 27 - 08 - 1998

திதி: 14 - 09 - 1999

எங்கள் அன்புத் தெய்வமே!
குடும்பத்தின் ஒளி விளக்கே!
கண்களில் நீருடன் கலங்கி நிற்க
எமை விட்டுப் பிரிந்து சென்றது ஏனோ?
உடலால் எமை விட்டுப் பிரிந்தாலும்
உணர்வுகளால் என்றும் எம்முடன்
உங்கள் நினைவுகள் தொடரும்.
என்றும் எம் நெஞ்சங்களில்
அணையாத தீபமாய் ஒளி வீசுவீர்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

உடுவில் தெற்கு (பாலாவோடை),
மானிப்பாய்.

(68994)

## கேள்வி அறிவித்தல்

### பருத்தித்துறை பிரதேச சபை

கீழே விவரிக்கப்பட்ட அட்டவணையிலுள்ள வேலைகளை நிறைவேற்றுவதற்கான கேள்விகள் வேலைகளைச் செய்வதற்கான தகுதியுடையவர்களிடமிருந்து 1999.09.23 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை எம்மால் வழங்கப்பட்ட படிவங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று பி.ப. 2.00 மணிக்கு கேள்விச் சபையால் பரிசீலனைக்கு எடுக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பிப்பவர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

அட்டவணையில் விவரிக்கப்பட்டவாறு மீளளிக்கக் கூடிய வைப்புப் பணத்தையும் மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணத்தையும் செலுத்துவதன் பேரில் 1999.09.21 ஆம் திகதி பி. ப. 4.00 மணிவரை உரிய படிவங்கள் எம்மால் வழங்கப்படும்.

கேள்விகள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்டு, தலைவர் பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி என்ற முகவரிக்கு குறித்த தினத்துக்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவஞ்சலிலோ அல்லது அதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை உள்ளடக்கிய அஞ்சலுறையின் இடதுபக்க மேல் மூலையில் எக்கேள்விக்கான பத்திரம் என குறிப்பிடல் வேண்டும்.

இது விடய மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அட்டவணை

| | கேள்வியின் பெயர் | மீளளிக்கக் கூடிய வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. | புலோலி பொது நூலகம் நிந்தை அடித்து புனரமைத்தல் | 1000.00 | 100.00 |
| 2. | ஆனைவிழுந்தான் சுடலையும் மண்டபமும் திருத்தம் | 700.00 | 100.00 |
| 3. | குடத்தனை ஆயிலடி வீதி திருத்தம். | 800.00 | 100.00 |
| 4. | குடத்தனை உப அலுவலகமும் பொது நூலகமும் வெள்ளை அடித்தல் | 500.00 | 100.00 |
| 5. | குடத்தனை உப அலுவலகப் பகுதியில் கிணறு புனரமைத்தல் | 200.00 | 100.00 |

ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்
ஜே. பி. யு. எம்
தவிசாளர்
பருத்தித்துறை பிரதேச சபை

பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி.
07-09-99.

[சி/8910]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சமவாய்ப்பு சரிப்படுமா?

கல்வி, தொழில் வாய்ப்பு, போக்குவரத்து, தங்குமிட வசதி அளித்தல், பொது இடங்களுக்குச் செல்லுதல் பொருள்களைப் பகிர்ந்தளித்தல், சேவைகள் ஆகியவற்றில் எல்லாப் பிரஜைகளுக்கும் சமவாய்ப்பு அளிப்பதற்கான சட்டம் ஒன்றைக் கொண்டுவர அரசு உத்தேசித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன, மத, மொழி, பால், அரசியல் சார்பு, அங்கவீனர் என்ற வேறுபாடுகளின்றி மேற்கூறிய விடயங்களில் எல்லாப் பிரஜைகளுக்கும் சமவாய்ப்பு அளிக்கும் உத்தேச சட்டத்தினால் பல வகைப் பாகுபாடுகளையும் நீக்க இயலும் — ஒழிக்க முடியும் — என்று நீதி, அரசமைப்புத்துறை அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

ஜனநாயகப் பண்புகளின் — குணாம்சங்களின் — உயிரோட்டமாக விளங்குவது பிரஜைகளின் சமத்துவமும் அவர்களுக்கு வழங்கப்படும் சம வாய்ப்புமே ஆகும். நாடு இன்றைய நெருக்கடியான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதற்கு சகல பிரஜைகளும் நடைமுறையில் சமமாக நடத்தப்படாமையும் அவர்களில் எல்லாத் தரப்பினருக்கும் சம வாய்ப்பு அளிக்கப்படாமையுமே பிரதான காரணங்களாகும்.

கல்வியிலும் தொழில் வாய்ப்பிலும் சம வாய்ப்பு அளிக்கப்படாததாலேயே பாகுபாடற்ற சமத்துவநிலை பேணப்படாததாலேயே தமிழ் இளைஞர்களை ஆயுதப் போராட்டம் கவர்ந்தது. தென்னிலங்கையில் கூட வேலை வாய்ப்பில் சம வாய்ப்பு வழங்கப்படாமை ஜே. வி. பி கிளர்ச்சிக்கான காரணங்களில் ஒன்று

ஆகையால் சம வாய்ப்பளித்தல் மக்களின் சமூக, பொருளாதார மற்றும் ஆன்மீக முன்னேற்றத்துக்குப் பெரிதும் உதவும். பல விடயங்களிலும் பாகுபாடு காட்டப்படுவதை இல்லாதொழிக்கப் பெரிதும் உதவும் என நம்பலாம்.

ஜனநாயகக் கட்டமைப்பில் சம வாய்ப்பு மக்களுக்குரிய உரிமையாகும்; மனித உரிமையுமாகும் ஆனால் இலங்கையில் நடைமுறையில் அவ்வாறு கருதப்படுவதில்லை.

சகல பிரஜைகளுக்கும் சம வாய்ப்பளிக்க வேண்டும் என்பது இப்போதைய அரசமைப்புச் சட்டத்தின் 12 ஆவது சரத்திலும் உண்டு. ஆனால் அரசாங்க வேலைவாய்ப்பில் இன விகிதாசாரம் பேணப்படுகிறது; ஏனைய சேவைகளிலும் பிரஜைக்குப் பிரஜை பாகுபாடு காட்டப்படுகிறது.

ஆகையால் அரசாங்கம் கொண்டுவர உத்தேசித்துள்ள சமவாய்ப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும், அது உரிய முறையில் எழுத்துக்கு எழுத்து நடைமுறைப்படுத்தப்படுமா என்பதிலேயே அதன் பயன்பாடும் வெற்றியும் தங்கியுள்ளன.

ஆனால் சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படுவதற்கு முன்னரே, அமைச்சரவைக்குள்ளேயே அதற்கு பலத்த எதிர்ப்புக் கிளம்பியிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இத்தகைய ஒரு சட்டத்தைத் தேர்தலுக்கு முன்னர் கொண்டு வருவதால் வாக்குவங்கியை இழக்க நேரிடும் என்று ஆளுங்கட்சியினர் அஞ்சுகின்றனர் போலும்!

சகல பிரஜைகளுக்கும் வேலை வாய்ப்பு, கல்வி ஆகியவற்றில் சமவாய்ப்பு அளிப்பதால் தமது அரசியலுக்கு நட்டம் உண்டாகும் என்று நினைக்கும் அரசியல்வாதிகள் இருக்கும் வரை இந்த நாட்டில் ஜனநாயகமும் தமக்குரிய உரிமைகளும் கிடைக்கும் என்று மக்கள் எவ்வாறு எதிர்பார்ப்பது? சமவாய்ப்புக்கு இணங்காதவர்கள் தமிழர்களைச் சமத்துவமாக நடத்த எவ்வாறு உடன்படுவர்?

# பல்வேறு புறக்காரணிப் பிரச்சினைகளுக்கும் மருத்துவத்துறை முகம் கொடுக்க வேண்டியுள்ளது

உதயன் 9-9-1999, 13-9-1999 இதழ்களில் வெளியான மருத்துவம், கல்வி, பயிற்சி, தொழில் தொடர் கட்டுரையின் மூன்றாவது (இறுதிப்) பகுதி இது.

வைத்தியகலாநிதி க.சிவநேசன்
M. B. B. S. (S L), M D (U.S A)
W. H O. FELLOW (MEDICAL EDUCATION)
(AMERICAN BOARD OF INTERNAL MEDICINE DIPLOMA

மருத்துவத் துறையின் வியத்தகு கண்டுபிடிப்புகளினால் முன்பு எதிர்காலமே இல்லாதவை என்று கருதப்பட்ட நோய்களை மாற்றி மக்களுக்குச் சாதாரண வாழ்க்கை அளிக்கக்கூடியதாகவுள்ளது. சிறுநீரகம் முற்றாகத் தொழிற்படாமல் இருக்கும்போது அதைச் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சையினாலும் என்புமச்சை மாற்று அறுவைச் சிகிச்சையினால் என்புமச்சையில் ஏற்படும் நிரந்தர தாக்கத்தையும் இரத்தப் புற்றுநோய்களையும் முற்றாக மாற்றக் கூடியதாக உள்ளது. விழி வெண்படலத்தில் ஏற்பட்ட நிரந்தரக் காயத்தினால் ஏற்பட்ட பார்வைக் குறைவை விழிவெண்படலத்தை (Cornea) மாற்றி அமைப்பதன் மூலம் நிவர்த்தி செய்யக்கூடியதாகவுள்ளது. இருதய இரத்தோட்டத்தைநிரந்தரமாகப் பாதிக்கும் நோய்களை (Angioplasty. Bypassgraft) முறைகளினாலும், இருதய வால்வுகளில் ஏற்படும் நிரந்தரத் தாக்கங்களை (Valve replacement) முறையினாலும்இரத்தக்குழாயில் ஏற்படும் அடைப்பை (Arteriel Baloon Angioplesty) சிகிச்சையினாலும் முன்பு போல் அல்லாமல் பூரணமாக மாற்றக்கூடியதாக உள்ளது.

சோதனைக் குழாய்க் குழந்தைகள் [Test Tube Babies], செயற்கையாக காது கேட்கும் கருவிகள் [Hearing Aids], மாற்றமுடியாத முழங்கால் இடுப்பு மூட்டு நோய்களுக்கு —[Prosthetic Knee, Hip Replacement], கடுமையான இரத்தப் பெருக்கின்றி ஆண்களுக்கு [Prostrate] இனால் ஏற்படும் சலஅடைப்பு [Transuretheral Retrobobic Prostratectomy என்பனவும் விழித்திரையில் இரத்தக்குழாய்களில் வரும் நோயினால் உண்டாகும் நிரந்தரப் பார்வையின்மையைத் தடுக்க — Lazer Photo Coagulation, கண்களின் பூவில் ஏற்படும் பார்வைக் குறைபாட்டிற்கு (Implgntable flexible Injectable, Lens for Catract) போடப்பட்டு, வெட்டுக்காயத்தைக் குறைப்பது பாரிய எரிகாயங்களுக்கு — Skin Cuiture and graft என்பனவும் பலவகையான Plastic Surgery என்பனவும் நிறமூர்த்தங்களில் மாற்றங்களை ஏற்படுத்துதல் (Genetic Engineering) வர்த்தக ரீதியில் பல மருந்துகளைச் செய்தலும் இவற்றுள் சிலவாகும். இவற்றைவிட இன்னும் பலவுள்ளன.

இவையெல்லாம் உள்ளடங்கிய வைத்தியசாலையை உருவாக்குவதற்கு மொத்தச் செலவு ஒரு நோயாளியின் கட்டிலுக்கு முன்னர் 15 லட்சம் ரூபாவாக இருந்தது. தற்போது ஏறக்குறைய 25 லட்சமாக உயர்ந்துள்ளது. இதை நாட்டிலுள்ள எல்லா மக்களும் அடைந்து பயன் பெறுவார்களாவென்ற பல பிரச்சினைகளை தீர்ப்பது இலகுவான விடயமல்ல. ஏனெனில் ஒரு நாட்டின் வருடாந்த வருமானத்தை [Per Capital Income] தீர்மானிக்கும் சுகாதார சேவையிலும் பார்க்க பல நாடுகளில் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பெருமளவில் பணம் செலவிடப்படுகிறது. சிறிய நாடுகளில் சனத்தொகை குறைவானதால் இதை நிர்வகிப்பது — இலகுவாகும். யுத்தகாலத்தில் தான் பாரிய மருத்துவ கண்டுபிடிப்புக்கள் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட ஒரு வைத்தியசாலையை நிர்மாணிக்க நாட்டில் நிரந்தர அமைதியும், உலகவங்கி, உலக நாணயசபை ஆகியவற்றின் நிதியும் வெளிநாட்டுக் கடன்களும் உதவிகளும், தனியார் மருத்துவ காப்புறுதியும், அரசாங்க மருத்துவக் காப்புறுதியும் தேவைப்படுகின்றன. கட்டுக்கடங்காத சனத்தொகையும், யுத்தத்தினால் ஏற்படும் இறப்புகளும் நலிவுற்றோர்களும், பெருமளவில் உற்பத்தி செய்யப்படும் வாகனங்களினால் சுற்றாடல் மாசுபடுத்தப்படுவதும் (Environmental Pollution), வீதி விபத்துக்களும், மதுபானம், புகைத்தல்போதைவஸ்து அதிகமாகப் பாவித்தலும் சமூகத்தில் ஏற்கப்படாத கெட்ட பழக்கங்களும் சுற்றாடல்சுகாதார (Environmental Sanitation) சீரழிவும் மற்றும் மாற்ற முடியாத புற்றுநோய், மன நோய், மூளை பாதிப்புற்ற நோயாளர்களை பராமரிப்பது போன்ற பல பிரச்சினைகளுக்கு மருத்துவ உலகம் முகங்கொடுக்க வேண்டி உள்ளது.

செயற்கை நிறமூட்டும் வாசனை வஸ்துகளையும் (Colouring Flavouring Agents) உணவைப் பழுதுபடாமல் இருக்க பாவிக்கும் இரசாயனப் பதார்த்தங்களையும் செயற்கை உரங்களையும் அதிகமாகப் பாவிப்பது, வயதெல்லை கூடிக் கொண்டு போவது புற்றுநோயைக் கண்டுபிடிக்கும் கருவிகளின் விருத்தி கதிர் இயக்கங்களுக்கு அதிகமாக உள்ளாக்கப்படுவது என்பனவும் அசாதாரண வைரசுக் கிருமிகளும் நிறமூர்த்தத்தில் ஏற்படும் அசாதாரண நோய்களும் தற்காலத்தில் புற்றுநோய் அதிகமாகக் காணப்படுவதற்குக் காரணங்களாகின்றன. உணவுக்குழாயில் வெற்றிலையும் மலச்சிக்கலை ஏற்படுத்தும் உணவும் சுவாசப்பையில் புகைத்தலும் ஏனைய காரணங்களாகக் கூறப்படுகின்றன.

தகுந்த காரணங்களற்ற கருச்சிதைவு சோதனைக் குழாய் குழந்தைகளை உண்டாக்குதல், Cloning முறைகள் பல நோய்களுக்கு உட்பட்டு நலிவுற்று மிகவும்கஷ்டமுற்று வாழ்க்கையை நடத்த இயலாத நோயாளியை மரணத்திற்கு உட்படுத்துதல் (Mercy Killing Euthanesia போன்றவைகளை தேவாலயங்கள் ஏற்காது, பலவிதப்பட்ட விவாதங்களுக்கு உள்ளாக்குகின்றன. அத்துடன் குற்றவாளிகள் குற்றங்களைப் புரியும்போது அவரது மன நிலையைக் கருத்திற்கொண்டு மரணதண்டனையிலிருந்து விதி விலக்கு அளிப்பது குறித்தும் மேற்கத்தைய நாடுகளில் விவாதிக்கப்படுகிறது. உண்மையான குற்றவாளிக்குமனநோய்இல்லாமல் இருக்கும்போது அதனைக் காரணங்காட்டுவதும் இதில் ஒரு குறையாக சுட்டிக்காட்டப்படுகிறது. இவையனைத்திலும்நோயாளிதான் முக்கியமானவராகக் கருதப்படுகிறார். தனது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் திறன் ஒரு நோயாளிக்கு இருக்குமானால் அதன்படிதான் அவர் விருப்பத்திற்கு தக்கவாறு வைத்தியம் செய்ய வேண்டும். இரண்டாவது அபிப்பிராயம் (Second Qpinion வேண்டப்படுவது வளர்ச்சியடைந்த நாடுகளில் சாதாரணம்.

அத்துடன் வைத்தியரிடம் அல்லது வைத்தியசாலையிடம் நோய் பராமரிப்பு சம்பந்தமாக நட்டஈடு கோருவது பல நாடுகளில் அதிகரித்து வருகிறது. இதை ஈடு செய்ய வைத்தியர்களுக்கு காப்புறுதியும் Mal Practice Insurance) வசதி செய்யப்படுகிறது. இவ்வழக்குகளை விசாரிக்கும் நீதியரசர்கள் நீதிபதிகள், நீதிவான்கள் மிகவும் அனுபவம் வாய்ந்தவர்களாகவும இதில் பரிச்சயம் உள்ளவர்களாகவும் இந்த வழக்குகளை விசாரிக்கும்போது அந்தந்த சமுதாயத்தில் இருக்கும் வைத்தியத் தரத்தைக் கருத்திற்கொண்டும் முடிவுகள் எடுப்பர்.

இவை அனைத்தையும் விட மனித வர்க்கம் சுகமாகவிருக்க அளவான சமபல உணவு, தேகப்பயிற்சி தேவையான ஓய்வு, கிரமமான தேகப் பரிசோதனை போன்றவை முக்கியம். தற்போது மனித வாழ்க்கைக்கு ஆன்மீகம் இத்துடன்இன்றியமையாததென கருதப்படுகிறது. 1998 ஆம் ஆண்டில் நடைபெற்ற உலக சுகாதார ஸ்தாபனத்தின் 37 ஆவது உலகளாவிய மாநாட்டில் சுகாதாரம் என்பதற்கு உடல், மன, சமூக, சுகம் என்பன மட்டுமன்றி ஆன்மீக சுகமும் என்றுசேர்த்துக் கொள்ளப்பட்டது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

மருத்துவ உலகம் பலதரப்பட்ட சாதனைகளைப் புரிந்தும் மேற்கூறப்பட்ட சவால்களினாலும் சோதனைகளினாலும் பிரச்சினைகளினாலும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் முன்னைய குறிக்கோளான '' இரண்டாயிரம் ஆண்டளவில் அனைவருக்கும் உடல் மன சுகாதாரம்' என்பதை நடைமுறைப் படுத்த சாத்தியமற்றதாகிறது.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' ('When Health is lost Everything is Lost.) என்ற வாசகத்துடன் இக்கட்டுரை நிறைவு செய்யப்படுகிறது. ★

## நாளை

**ஆவணி 29**
புதன்கிழமை
திதி: பஞ்சமி
முற்பகல் 7.46 வரை
நட்சத்திரம்: விசாகம்
முன்இரவு 7.12 வரை.
ஷஷ்டி விரதம்
சுபநேரம்: 4.33—6.03
ராகுகாலம்: 12.03—1.33
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

பகையிலே தாறுமாறாக வந்துவிழும் விஷம் போன்ற வார்த்தைகள் நட்பு வரும் போது தடைக்கல்லாகிவிடும்

—அனுபவமொழி

## சமய சந்நிதிகளில்

மல்லாகம் அருள்மிகு பெரிய தம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 12 தினங்கள் நடைபெற உள்ளது.

இறுதி நாளான 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை சங்காபிஷேகமும் பகல் அன்னதானமும் இடம் பெறும். (ஐ-152)

★ ★ ★

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்குத் தேர்த் திருவிழாவும், 25 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.

உற்சவ நாள்களில் தினமும் மாலை 5 மணி முதல் ''பெரிய புராணம்'' பற்றி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ஆறு. திருமுருகன் தொடர் சொற்பொழிவாற்றுவார். (இ—7)

★ ★ ★

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கையம்மன் ஆலயத்தில் இன்று மணவாளக்கோலத் திருவிழாவும் பகல் நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகமும் மாலை அம்பாள் பூந்தண்டிகையில் திருவீதி உலா வருதலும் இடம் பெறவுள்ளன. (இ-86)

★ ★ ★

வலி. வடக்கு, செப். 14

மல்லாகம் பெரிய தம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும். [க-86]

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 14

ஈவினை மத்தி ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் திருக்கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை புதன்கிழமை காலை 10. 00மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 10. 00 மணிக்கு தேர் திருவிழாவும் மறுநாள் காலை தீர்த்தோற்சவமும் இடம் பெறும், [க-ரி]

★ ★ ★

காரைநகர் செப். 14

காரைநகர் பயிரிக்கூடல் சுப்பிரமணிய சுவாமிகோயில் மணவாளக் கோலத்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளது.

காலை 8, 00 மணி முதல் சகஸ்ர [1008] சங்காபிஷேக ஆராதனைகள் நடைபெற்று முருகப்பெருமான் திருவீதியுலா வரும் காட்சி இடம் பெறும்.

[இ-73]

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 14

சாவகச்சேரி நகர் ஸ்ரீ அமிர்தபாஷணி சிவன் கோயிலில் இன்று செவ்வாய்க்கிழமை மணவாளக் கோல விழாவும், சங்காபிஷேகமும் இலட்சார்ச்சனைப் பூர்த்தியும் இடம் பெறும்.

[ரி-30-117-31]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப்பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், செப். 14

யாழ். குடா நாட்டில் இருந்து வெளியிடங்களுக்கு விமானம் மூலம் பயணம் செய்ய பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் தொடர்ந்து வெளியாகி வருகின்றன· இம்மாதம் 5 ஆம் திகதி வரை விமானப்பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

சங்கானை

ரீ. குகதாசன் (112049ஏ), எஸ். திலீபன் (112063ஏ), கே. நவரட்ணம் (112100ஏ), என். அரியபுஷ்பம் (112100பீ), என். ஜே. ஜெயக்குமார் (112100சீ), என். டீ. ராஜ்குமார் (112100டீ), எம். ஜெயரத்தினம் (112125ஏ). கே. சிவனேஸ்வரி (112204ஏ), கே. நாகராஜினி [112204பீ), ரீ. சாந்தினி [112760ஏ), எஸ். தவராசா [112760பீ).

ரீ. அனஸ்ரா (112760சீ), ரீ. அனஸ்ரன் [112760டீ], ரீ. ஜீவானந்தன் [112780ஏ], எஸ். கோகுலமணி [112783ஏ], எஸ். சிவதர்ஷன் [112783பீ], கே. குலசிங்கம் [112949ஏ], ரீ. சரஸ்வதி [112950ஏ], பீ சேதுகாவலிங்கம் [112962ஏ], ஆர். சண்முகன் [112981ஏ), என். தவம் [113038ஏ], ஆர். தவன் [113038பீ].

கே. சிறீதரன் [113080ஏ], எஸ். பிரகாஷ் [113080பீ], கே. பிரகலாதன் [113086ஏ], எஸ். சசிதரன் [113107பீ], எஸ். தர்மகுலசிங்கம் [113111ஏ], ரீ. தினேஸ்குமார் ]113111பீ] என். ரட்ணவடிவேல் [113151ஏ], என். சின்னையா [113151சீ], கே. அம்பலன் [114603ஏ], எஸ். சிவபாக்கியம் [114779ஏ], கே. பூபாலசிங்கம் [114914ஏ].

எஸ். கேதீஸ்வரன் [114959ஏ], என். எக்ஸ். கமலாதினி [115004ஏ], ஆர். அஜித்குமார் [115004பீ], ஆர். கோசிகன் [1150014சீ], எஸ். கேசவன் [115043ஏ], என். குமாரதாஸ் [115057ஏ], எஸ். பாலசுப்ரமணியம் [117006ஏ], எம். குணரட்ணம் [117008ஏ], வீ. காஹராஜன் [117020ஏ], எம். மோகனா [117020பீ], சுப்பையா [117789ஏ].

நல்லூர்

எஸ். முத்துலிங்கம் (096641ஏ), எம். சிவோலந்து (096641பீ), கே. ஜனசரட்ணம்(099347ஏ), ஆர், சிவசாந்தி (104214ஏ), ரீ. விஜயலக்சுமி (10466ஏ), எம் சீ. அலோசியஸ் (104269ஏ), ஏ, கலைவாணி (104272ஏ), எல். மகாசுத்ரா (104277ஏ), ஏ. இஸ்சபெல்லா (104278ஏ). ஜே. கீ. டிலானி (194281ஏ), எஸ். லூர்த்துநாயகி (104283ஏ).

ஜீ. மரியகொறற்ரி (104284ஏ), எஸ் எஸ். புஸ்பராணி (10428ஏ5), ஆர். தனலக்சுமி (104286ஏ), பீ. நிர்மலாதேவி (104287ஏ), எம். அல்வினா (104390ஏ), ஜீ ஈ. துஷாந்தி (104870ஏ), பீ. ராஜநாயகம் (107714ஏ), ஆர். சிவநாதன் (107714பீ), பீ. சுப்ரமணியம் (107748ஏ), எஸ். பீ. சைலா (107748பீ), கே. வேலாயுதம்பிள்ளை (107749ஏ), எஸ். சிறீதரன் (107749பீ), எஸ். சாரங்கன் (107749சீ).

ஜீ. யோகராஜா (107757ஏ), எஸ்- உதயகுமார் (107774 ஏ), என். திலக்சன் (107774 சீ), ரீ. மாணிக்கம் (1077ல0 ஏ), ரீ. குமாரசாமி (107791 ஏ), ரீ. பாக்கியம் (107791 பீ), எம். சண்முகநாதன் (107792 ஏ), எஸ். செல்லதுரை (109839 ஏ), கே. உஷ்மிரா (109841 ஏ), ஜீ. சந்திரப்பிள்ளை (109847ஏ), ஜே. ஓ. லோகு (109859ஏ), பீ. பொன்னுத்துரை (109866 ஏ).

எஸ். வரப்பிரகாசம் [109867 ஏ], என். வேலுப்பிள்ளை [109869 ஏ), ஆர். ஆர். ஞானசேகரம் [109898ஏ], கே. கந்தசாமி [109948ஏ], ரீ. ஜெயாதினி [109968ஏ], எஸ். மகாலிங்கம் [110043ஏ], எம். சுகிதா [110943பீ], பீ ராசையா [110044 ஏ], ரீ. நடராஜா [110046 ஏ[, என். பாலமோகன் [110046பீ], பீ. பொன்னம்பலம் [110049 ஏ], எஸ். நடராஜா [110134].

ஐ. கருணாநிதி [110136ஏ], கே. கிசோதன் [110136பீ], கே. சிறில்சன் [110136சீ], கே. அமீரா [110136டீ], எம். குட்டித்தம்பி (110160ஏ], எம் அன்னலெட்சுமி [110160 பீ], எம். றஜனி ]110204 ஏ], எஸ். அகிலன் [110212ஏ], எஸ். சிவான, சுந்தரம் [110230 ஏ], எஸ். கேதீஸ்வரி [110239 ஏ] ரீ சுதிரமலை, [110240 ஏ].

கே. ஞானராஜ் (110241ஏ). ஏ. எம். டிவர்ணா (110258ஏ), வீ. இந்திரகலா (110259 ஏ), எம். பாமதீஸ்வரி (110260ஏ). எஸ் சீ. றீனி (110261 ஏ), எம். சைலாசிறி (110263 ஏ), எஸ். சந்ரபிரியா (110268 ஏ), எஸ். ஜெயஞானசேகரம் (110270ஏ), ஏ.எம். இமாலட் (110271ஏ), கே. கதிர்காமத்தம்பி (110273 ஏ), பீ. விமலராணி (110275 ஏ), வீ, விக்னராஜா (110280 ஏ),

வீ. சிவநேசன் (110283ஏ), எஸ். டீ. வேளசாமி (110289ஏ), ஏ. கௌசலாதேவி (110293 ஏ), கே. லெட்சுமி (110300 ஏ), எம். யேசுதாசன் (110314 ஏ), பீ, சுந்தரராஜன் (110315ஏ), எஸ். கமலதீபன் 110360 ஏ), எச். வள்ளிபுரநாதன் (110360ஏ), ஈ. வள்ளிபுரநாதன் (110379பீ), கே. சின்னத்தம்பி (110448ஏ), எஸ். செல்லையா (110471 ஏ), ஏ. கனிலசர் (110473 ஏ), ஆர். தம்பிராஜா (110475 ஏ),

எம். விசுதேவன் [110480ஏ]. என். சீவரட்ணம் [116313ஏ], எஸ். சசீபன் [116313பீ], கே. காந்தரூபன் [116357ஏ], வீ. தியாகலிங்கம் [116363ஏ], வீ. சுப்ரமணியம் [116367 ஏ], பீ. இலக்குநாதன் [116380 ஏ], எஸ். கமலாதீபன் [116388 ஏ], எஸ். ராசலிங்கம் [116413ஏ], எஸ். அருமைத்துரை [116418 ஏ].

எஸ். ராஜரட்ணம் [116419ஏ], ஆர். சுபத்திராதேவி [109154ஏ] ஜீ ரட்ணம் [109154பீ), எஸ். ரட்ணம் [109154சீ], எஸ் ரட்ணம் [109154டீ], ஜி. கந்தன் [112429ஏ]. பீ. சுந்தரராஜா [112613ஏ], ஏ. நவநிதிர்ஷனன் [113811ஏ], கே பஞ்சாட்சரம் [113835ஏ], பீ. சுபத்ரா [113835பீ], பீ. துரைசிங்கம் [113988ஏ], ஆர். ராமசாமி [114036ஏ[, ரீ. தனலக்சுமி [114152ஏ]. எஸ் சாரதாதேவி [114180ஏ], எஸ். நிரஞ்சனாதேவி [114185ஏ], எஸ். கஜேந்திரன் [114185பீ], ரீ. வரதராசா [114223ஏ], வீ. மோகனப்பிரியன் [114223பீ], வீ. இன்ஜன் [114223சீ], பீ. குமாரசுவாமி [115787ஏ], எஸ். கௌசலாதேவி [115931ஏ], எஸ். ஜெகதீஸ்வரன் ]115981பீ], ரீ. தனலக்சுமி [117918ஏ],

பீ. கிருஷ்ணமோகன் [117918 பீ], பீ. கனாளதேவி [100185ஏ] பீ. சுவீதன் [100185 பீ], பீ. சேனாதிராஜா [100196 பீ], ரீ. சேனாதிராஜா [100196 பீ], ரீ. ராஜேஸ்வரி [102201 ஏ], ஜே. வியாசன் [102201 பீ[, எஸ். சுதர்ஷன் [103509 ஏ], ஏ. ரகுநாதன் [103550 ஏ], எஸ். ரகுநாதன் [103550பீ], ஆர். ஜெயரூபி [103550சீ].

ஆர். ஜெயந்தி (103550டீ), எஸ். ஜீ. சிவேந்திரன் (105978ஏ), வை, துரைசிங்கம் (111710ஏ), ஏ. துரைசிங்கம் (111710பீ), ஆர். ரமேஷ் (111791ஏ), ரீ. ராதுரை (111791பீ), கே. சர்மிளர் (112163ஏ), கே. தனுஷயா (112961பீ), ரீ. நவரட்ணம் (113127 ஏ), ஆர். தங்கமணி (114613ஏ), ஆர். விஜயதாஸ் (114613பீ).

எஸ். பாஸ்கரன் (114661ஏ), பீ. திபாகரன் (114661பீ), என். குமாரசுவாமி (114724பீ), கே. தர்மபூபதி (114724ஏ), கே. குகனி (114724சீ), எம். நகுலேஸ்வரி (114829ஏ), கே. ராசகிருஷ்ணர் (1144833ஏ), எஸ். இளங்கோவன் (115012ஏ) என். சற்குணசிங்கம் (117007ஏ), பீ. பிரதீபன் (117034ஏ), கே. நடராசா (117043ஏ), கே. கதிர்காமத்தம்பி (117307ஏ).

[தொடரும்]


# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

## மானிப்பாய்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான கேள்விகள் வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் கேள்விச் சபைத் தலைவரினால் 1999-09-24 ஆம் திகதி முற்பகல் 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே 2 மணிக்கு கேள்விச்சபையால் பரிசீலனைக்கு எடுக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படாத கேள்வி படிவப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|
| நவாலி வடிசாலைக் களஞ்சியக் கட்டடம் அமைத்தல் 5' x 20' — கூரை | 500.00 | 50,000.00 |

1. மேற்படி வேலைகளுக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விகளை விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்கள்.
2. கேள்விப் பத்திரங்களில் பொருள்கள் சேவைகள் வரி (GST) சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை, பொருள்கள் சேவைகள் வரி (GST) சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
3. மேற்சொல்லப்பட்ட இரு வைப்புப் பணமும் வலிகாமம் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியில் 18—09—99 ஆம் திகதியிலிருந்து 22—09—99 ஆம் திகதி முற்பகல் 12 மணிவரை செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் தங்களால் செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கிய பதிவுப் புத்தகங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப் பிரதியும் இணைப் பிரதியும் தனித்தனி இரு கடித உறைகளில் இடப்பட்டுக் கடித உறைகளின் இடது புற மேற்பக்கத்தில் வேலையின் விவரமும் எழுதப்பட்டு தலைவர் வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய் என முகவரியிடப்பட்டு 24—09—99 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
6. மேலதிக விவரங்களை எமது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
7. ஆகக் குறைந்த கேள்விகளைக் காரணம் காட்டாது நிராகரிக்கும் உரிமை கேள்விச் சபைக்கு உண்டு.

தலைவர்

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய்.

[சி/8920]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் சந்தையைத் திருத்தும் பணி ஆரம்பம்

சுன்னாகம் மரக்கறிச் சந்தை வலி. தெற்கு பிரதேச சபையினால் திருத்தி அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுமார் 60 லட்சம் ரூபா செலவில் இந்த சந்தைக் கட்டடம் கட்டப்படவுள்ளது.

முதற்கட்டமாக சுன்னாகம் சந்தையின் தெற்குப்புறத்தில் உள்ள கடைத் தொகுதிகளையும் மேற்குப் புறத்தில் உள்ள மரக்கறிச் சந்தைப் பகுதியையும் கட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது மரக்கறிச் சந்தையின் ஒரு பகுதி கிழக்குப் புறத்தில் உள்ள பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சந்தைக் கட்டட வேலைகள் மழை காலத்துக்கு முன்பாக முடிக்கப்படலாமெனத் தெரிய வருகின்றது. (இ-86)

## விற்பனை

யாழ். பிரதான வீதியில் உள்ள வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் ஐஸ் கட்டி உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

25 இறாத்தல் நிறை கொண்ட ஐஸ் கட்டி ஒன்று 150 ரூபாவாக மேற்படி சமாசத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

(இ-17)


# தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

## வெற்றுச்சாக்கு வெற்றுப்பை விற்பனை

## கூறுவிலை கோரல்

எமது சங்கத்திலுள்ள 19,874 வெற்றுச் சாக்குகளும், 27,869 வெற்றுப் பைகளும் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குள்ளன. மீளப்பெறக் கூடிய வைப்புப்பணம் ரூபா 500 செலுத்தி 1999 - 09 - 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பொது முகாமையாளர், தெல்லிப்பழை, ப. நோ. கூ. சங்கம், துர்க்காபுரம், தெல்லிப்பழை என்று விலாசமிட்டு கேள்விப்பத்திரங்களை அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்
தெல்லிப்பழை,
ப. நோ. கூ, சங்கம்.

13.09. 1999.

[சி/8924]

# வாழ்க்கைச் செலவு உயர்வுக்கேற்ப ஓய்வூதியம் அதிகரிக்கப்பட வேண்டும்

## நாடாளுமன்றில் கோரிக்கை

கொழும்பு, செப். 14 வாழ்க்கைச்செலவு உயர்வுக்கேற்ப ஓய்வூதியர்களுக்கு அதிகரிப்புகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கொழும்பு மாவட்ட ஐக்கியதேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கருணசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

நாடாளுமன்றில் அண்மையில் இடம்பெற்ற பகிரங்க சேவை ஓய்வூதியம் பெறுவோர் நம்பிக்கை நிதிய சட்டமூல விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசதுறையில் ஊழியர்களாக இருந்து நாட்டுக்காக உழைத்து ஓய்வுபெற்றவர்களது துயரங்களைத் துடைப்பதற்கு அரசாங்கம் பின்வாங்கக் கூடாது.

இலங்கையில் சுமார் 3 லட்சத்து 60 ஆயிரம் பேர் ஓய்வூதியம் பெறுவோராக உள்ளனர். இவர்களில் சுமார் 2 இலட்சத்து 70 ஆயிரம் பேர் ஆசிரியர்களாக இருந்து ஓய்வுபெற்றவர்களாவர்.

இவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டாலும் கூட வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கேற்ப ஓய்வூதியம் அதிகரிக்கப்படுவதில்லை என்றார்.

மாத்தறை [மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் நிதியமைச்சருமான றொனிடிமெல் உரையாற்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வாழைச் சேனையில் 4 படையினர் காயம்

மட்டக்களப்பு, செப். 14 மட்டக்களப்பு — வாழைச்சேனைப்பகுதியில் விடுதலைப் புலிகள் நேற்றுக்காலை மேற்கொண்ட இருவேறு தாக்குதல்களில் நான்கு படையினர் காயமடைந்தனர்-

வாழைச்சேனை கடதாசி ஆலை முகாமிலிருந்து வீதிக் கண்காணிப்புக்கென சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர் மீது காவத்தமுனைப் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலி இரு இராணுவத்தினர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தைதொடர்ந்து முகாமிலிருந்து உதவிக்கு வந்த இராணுவத்தினர் மீதும் புலிகள் மோட்டார்த் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் இரு படையினர் காயமடைந்தனர்.

இதேவேளை—

விடுதலைப் புலிகளும்— இராணுவத்தினரும் மாறி மாறி மேற்கொண்ட மோட்டார் தாக்குதல்களில் சிக்கி நான்கு பொதுமக்களும் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7-21)


உ

யாழ். கந்தர்மடம் ஆத்திசூடி வீதி

## அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்

மேற்படி ஆலயத்தில் 31-08-99 தொடக்கம் அலங்கார உற்சவம் நடைபெற்று 15 ஆம் நாளாகிய இன்று 14-09-99 செவ்வாய்க்கிழமை எம் பெருமானுக்கு காலை 9.00 மணிக்கு கலச சங்காபிஷேகம் நடைபெற்று பகல் 12.00 மணிக்கு மாகேஸ்வர பூசை (அன்னதானம்) நடைபெறும்.

மாலை 4.00 மணிக்கு விநாயகப் பெருமானுக்கு பஞ்சமுக அர்ச்சனையும் அதனைத் தொடர்ந்து திருவூஞ்சலும் நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி உலா எழுந்தருளுவார் என்பதை அறியத்தருகின்றோம்.

அடியார்கள் அன்னதானத்தில் பங்கு கொண்டு விநாயகப் பெருமானின் அருள் காட்சியைக் கண்டு களித்து நாட்டு மக்களின் துயர் நீங்க பிரார்த்தனை செய்யும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

- பரிபாலனசபை.

(69041)


## முதலாம் ஆண்டுநினைவஞ்சலி

தோற்றம்: 27-06-1950

மறைவு: 26-08-1998

### அமரர் நாகலிங்கம் கணேஸ்

(மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கம்பர் மலையை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

திதி: 14-09-1999

அன்புக்கினிய என் கணவரே!
அன்பாகப் பாசமாக வாழ்ந்தீரே!
பாதிதனிலே எம்மைவிட்டுப் பிரிந்தீரே!
ஆண்டு ஒன்று என்ன எத்தனை ஆண்டுகள்தான் சென்றாலும் உங்கள் நினைவுகள் எம் நெஞ்சில் நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் ஓராண்டு நிகழ்வு இன்று 14-09-99 நடைபெறும். அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்கள், மச்சாள்மார், பெறாமக்கள், மருமக்கள், உற்றார், உறவினர்கள்.

கம்பர்மலை,
உடுப்பிட்டி வடக்கு.

(69054)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

## பல்கலைக்கழக அனுமதி 1998/99

## இடம் நிரப்பும் பட்டியல்

(1 ஆம் படி)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுக் காரியாலயத்திலிருந்து பின்வரும் கற்கை நெறிகளுக்கான இடம் நிரப்பும் பட்டியல் கிடைத்துள்ளது. இதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி கிடைத்தவர்கள் உடன் பதிவைமேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

1. பௌதிக விஞ்ஞானம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி கிடைத்த மாணவர்களின் எண்ணிக்கை 71 (யாழ். மாவட்டத்திலிருந்து)
2. பௌதிக விஞ்ஞானம்: கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி கிடைத்த மாணவர்களின் எண்ணிக்கை – 07 (யாழ். மாவட்டத்திலிருந்து)
3. மருத்துவம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி கிடைத்த மாணவர்களின் எண்ணிக்கை – 03 (வவுனியா மாவட்டத்தில் இருந்து) – 01 (கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து)

— பதிவாளர்

(சி/8926)

செப்பு மின்கம்பிகள் திருட்டு:

# நகரசபை உறுப்பினரும் மற்றும் இருவரும் கைது!

யாழ்ப்பாணம், செப். 14 மல்லாகம் சந்திக்கு அண்மையில் மின்சார சபைக்குச் சொந்தமான செப்பு மின் கம்பிகளைத் திருடும் நோக்குடன் வெட்டியதாகத் தெரிவித்து— சந்தேகத்தின் பேரில் — மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை இம்மூவரும் மல்லாகம், பருத்தித்துறை நீதிவான் இ.த.விக்கினராஜா முன்னிலையில் அவரது இல்லத்தில் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்ட சமயம் அவர்களை இன்று வரை விளக்கமறியலில் வைத்து, இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

வல்வெட்டித்துறை நகரசபையின் ரெலோ உறுப்பினர் சுப்பிரமணியம் சந்திரசேகர் (வயது 50) மற்றும் க. சூசைதாஸ் (யாழ்ப்பாணம்), ஜோர்ஜ் மரியநாயகம் (யாழ்ப்பாணம்) ஆகியோரே கைது செய்யப்பட்டு நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவ்வாறு வெட்டி அகற்றப்பட்டதாகக் கூறப்படும் ஒரு பகுதி கம்பிகள் சுன்னாகம் மலப்பை என்ற இடத்தில் இருந்து மீட்கப்பட்டதாகவும்—

கார் ஒன்றும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டதாகவும்—

மேலும் தெரிவிக்கப்பட்டது.

கம்பிகள் வெட்டப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்ட பொதுமக்கள் அது குறித்து கொடுத்த தகவலைத் தொடர்ந்து மல்லாகம் சந்தியில் உள்ள இராணுவத்தினர் இவர்களைப் பிடித்து பொலீஸாரிடம் ஒப்படைத்ததாகவும் —

இக்குழுவிலிருந்து மூவர் தப்பியோடிவிட்டதாகவும் —

மற்றொரு தகவல் தெரிவித்தது. (உ-86)

## பூங்கா திறப்பு

கொழும்புத்துறை துரையப்பா வித்தியலயத்தில் மின் இணைப்பை ஆரம்பிக்கும் வைபவமும் கணனியை இயக்கி வைத்தல் நிகழ்வும் சிறுவர் பூங்கா திறப்புவிழாவும் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்குப் பாடசாலை அதிபர் மு. மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளன. (ஐ-7)

## பொதுமக்கள் சிரமம்

இராஜவீதியுடன்வந்திணையும் திருநெல்வேலிகலாசாலை வீதி நீண்ட காலமாக மூடப்பட்டிருப்பதனால் விவசாயிகள் கால்நடை வளர்ப்போர் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

இராணுவம் குடாநாட்டைக் கைப்பற்றிய பின்னர் இப்பகுதியில் முகாம் அமைத்திருந்தனர், ஆனால் அண்மைக் காலத்தில் இராணுவ முகாம் அகற்றப்பட்ட பின்னரும் அந்தவீதி மூடப்பட்டே உள்ளது.

இதனால் கோப்பாய் நீர்வேலிப் பகுதியில் உள்ள விவசாயிகள் பெரும் சிரமம் அடைகின்றனர். (இ-73)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி செல்லத்துரை

பிறவுண் வீதி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், முழங்காவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லத்துரை 8-9-99 அன்று முழங்காவிலில் காலமானார்.

அன்னார் கண்மணியின் அன்புக் கணவரும் சிவனேசன் (ஜேர்மனி), வசந்தி (சுவிஸ்), கலா (கொக்குவில்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் லலி (ஜேர்மனி) ரவி (சுவிஸ்), புனிதரூபன் (கொக்குவில்) ஆகியோரின் மாமனாரும், பிரியா, றுபித்தா, அதிஸ்ரியா, பியானி, வின்சிலோ, அனிற்றாமேரி, யுனிற்றாமேரி, றொசானா, சாம்ஜெனிற்றா ஆகியோரின் அன்புப் பேரனும் பூரணம், துரையம்மா, துரை (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரனும் சுந்தரம், பட்டு ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் முழங்காவிலில்நடைபெற்றன.

அன்னாரின் மரணச்சடங்கு அஞ்சலி அவரது பிறவுண் வீதி இல்லத்தில் இன்று 14-9-99 நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்.
புவனேஸ்வரி (பெறாமகள்)
ரவீந்திரன் (சுவிஸ்)

வளாக வீதி,
கொக்குவில்.

(69053)

## திருமதி சபாரட்ணம் தையல்நாயகி

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திருமதி சபாரட்ணம் தையல்நாயகி அவர்கள் 13-9-99 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் தாவடியைச்சேர்ந்த காலஞ்சென்ற நாகலிங்கம் - பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும் சபாரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் இராசலட்சுமி, கணேசமூர்த்தி [வர்த்தகர்], காலஞ்சென்ற சொர்ணலட்சுமி, ஜெயலட்சுமி [இத்தாலி], சிவலிங்கம், கணேசலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் தெய்வேந்திரம் [வர்த்தகர்], இராசலட்சுமி, பகீரதன் [இ.போ.ச], சிறீதரன் [இத்தாலி] ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சாம்பசிவம், நடராஜா மற்றும் சிவசிதம்பரம், பூமாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 14-09-99 செவ்வாய்க்கிழமை ஆடியபாதம் வீதியில் உள்ள இல்லத்தில் பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(69052)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org